164

ஸர்வஜித் ஞூ
சித்திரை மீ

ஸம்புடம் - 6
ஸஞ்சிகை - 4

ஸ்ரீ:

164

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 APR 1947
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :
நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,
சென்னை.

JL
Q22m21', N41
N47. 6.4.
189232

April 1947
Vol. 6 No. 4

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்.
1	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	77
2	வேதவித் சப்தார்த்த விவரணம்	81
3	திருவேங்கடன் திருக்குறள்	84
4	செய்திகள்	88
5	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	89
6	லோக ஹிதைஷிணி	90
7	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	92

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்.

1. எழுதி யனுப்பப்படும் வியாஸங்கள், மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம், தபால் சார்ஜூக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கியபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாசம் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 6	ஸர்வஜித் ௵ சித்திரை ௴	ஸஞ்சிகை 4

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥"

———:o:———

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 APR 1947
MADRAS

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

———::o::———

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ நரஸிம்ஹ வரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[6-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L.,
அட்வோகேட், திருச்சி.]

தர்க்கன்:— அகஸ்த்ய முனிவர் வஸிக்கும் மலய கிரியைப் பார்க்க வேணும்.

" விந்த்யஸ்தம்பவ்யதிகரசிலா விஸ்தராசாந்தஸிந்து:
காமம் ஶ்ரீமாந் நாபிநாகமலஜ ப்ராத்ருபூதோதயாத்ரி: ।
நாகாவாஸம் நஹுஷநிஜகர்மார்த்தஸர்பத்வஶக்தி:
ப்ரஹ்மாவர்த்தம் ப்ரதிஷ்ட வஸந் ராஜதே முக்தகல்ப: ॥ "

ஸ்வாமியைப்போல் இவர் ஆகாரம் ஹ்ரஸ்வம்; தபோ மஹிமையோ அபாரம். தமிழ்ப் பாஷைக்கு இவர் முலபூதர். 'ஸாதாரஸ்த்ய ப்ரணேதா' என்று திவ்ய ப்ரபந்தங்கள் அந்த த்ரமிட பாஷையைப் புகழ்ந்தன. அவருடைய பெருமை அவர் பாஷையான தமிழுக்கும் உண்டு. இவர் செல்லும் மார்க்கத்தில் விந்த்யமலை இருந்தது. அதை இம்முனிவர் தம் யோக மஹிமையால் தாண்டிவிடலாம்; மலைக்கு மேலே இவர் உயர்ந்து தாண்டிப் போகலாம். இவர் வாமநர் போன்றவராயினும், த்ரிவிக்ரமர்போல் உயர்ந்து தாண்டச் சக்தியுடையவரே. ஆயினும் அப்படிச் செய்யத் திருவுள்ள மில்லை. இவருக்கும் தாழ இருக்கும்படி அம்மலையைக் குனியச் செய்தார். அதன் ஔந்நத்ய கர்வத்தை அடக்கித் தம் ப்ரபாவத்தை ப்ரகாசப்படுத்தினரென்பதை 'வ்யதிகரசிலா' என்பதால் வ்யஞ்ஜநம் செய்கிறார். இது மலை பட்ட பாடு. கடல் பட்ட பாட்டை 'விஸ்தராசாந்தஸிந்து:' என்பதால் விளக்குகிறார். ஓர் ஆசமநத்தில் உட்கொள்ளப்பட்டது கடல். இவர் உதித்தது கலசத்தில். இவர் பெருமை அபாரம். மலையைக் குனியச் செய்து, 'ஸாகரம் ஶோஷயிஷ்யாமி' என்பதுபோல் கடலை உறிஞ்சியவர். வாதாபி என்னும் அஸுரனைத் தம் வயிற்று அக்நியால் ஜீர்ணம் செய்தவர். இந்த்ர ஸ்தாநத்துக்கு வந்த கர்விஷ்டனான நஹுஷனை ஸர்ப்ப மாக்கினவர். ப்ரஹ்ம தேவரின் குழந்தையாகிய இம்முனிவர் முக்தரைப்போல் விளங்குகிறார். தேஹம் விழுந்த பிறகுதான் முழு முக்த ராகலாம். தேஹம் இருக்கும் வரையில் 'ஜநகோ முக்தவத்வஸேத்' என்றபடி முக்தரைப் போன்றவரே. 'முக்தகல்ப:' என்பதால் ஈஷத் குறைந்தவரே என்று ஸூசநம்.

தர்க்கன்:— ஸ்வாமிந் ! அப்பெரியார் ஆச்ரம ஸ்தாநம் இது.

" [illegible] ஸ்தம்பம் திவஸபதிரதம் யத்ர நாதிப்ரதீதா
ஶர்வாணீ [illegible] ஸமீஹ ஸாகா ஸூக்ஷ்மவிஷ்டம்பம் வஹதி ।
ஸித்தை: ஸாத்ய[illegible] விஹரதி கண: ஸைந்த்யவா: ஸாங்கவேதை:
[illegible]: வாணைர்யஸ்மிந் வர்ணிதம் ஜ்ஞாநசேதஸாயை: ॥ "

தமிழ்நாடு
39222

இந்த ச்லோகத்தால் குத்தாலம், பாபநாசம், தென்காசீ முதலிய ப்ரதேஶங்கள் வர்ணிக்கப்படுகின்றன. கோடை காலத்துக்குத் தநிகர்கள் மலைமேல் உள்ள வாஸ ஸ்தலங்களுக்குக் குளிர்ச்சிதேடிப் போவார்கள். என்ன கோடையானு லும் பகல் முழுவதும் அங்கு ஸூர்ய வெப்பம் இராது; ஆனால் ராத்ரியில் குளிர் அஸஹ்யம். இந்த அகஸ்த்யாச்ரம மலய ப்ரதேஶங்களில், பகல்முழுதும் வெப் பம் என்பதே இராது. ராத்ரி ஸுகசீதளமாகக் குளிர்ந்திருக்கும்; அதிசீதளமாக வும் இராது. இந்த ஆச்ரம ப்ரதேசத்தில் பல ஶுகங்கள் அகஸ்த்யர் உபதேசிக் கும் அத்யாத்ம வித்யையை நிகம கல்பதரு போன்ற வ்ருக்ஷ ஶாகைகளில் ஆரூடங்களாயிருந்து கேட்டுக்கொண்டேயிருந்து, தாம் கேட்டபடியே 'ஶுக முகாத³ம்ருத த்³ரவஸம்யுதம்' என்றபடி அமுதினு மினிமையாய் உச்சரிக்கும். இதைப் பார்த்தால் ஶுக ப்ரஹ்மமே நேரில் பாடுகிறாரோ வென்று நினைக்கும் படி யிருக்கும். ஒரு சுகருக்கு இங்கே பல ஶுகங்கள். இந்த ஆச்ரமத்தில் சாந்தி ரஸ பூர்ணரான அகஸ்த்யர் எனும் மஹாயோகி ஆத்யக்ஷராக வஸிப்பதால், 'தத்ஸந்நிதௌ வைரத்யாக:' என்று யோக ஸூத்ரத்தில் கூறியபடி, ஸஹஜ சத் ருக்களான ம்ருக ஜாதிகளும் தங்கள் ஜந்மசத்ரு பாவத்தை விட்டு விட்டுப் பரம மைத்ரியோடு விளையாடும். மைத்ரீ, கருணை, முதிதை ஆகிய ஶம குணங்களை யோகிகள் ஸததமும் பாவனை செய்வர். அவர்கள் சித்தத்தில் இந்தக் குணங்களை நிபிடமாகப் பாவனை செய்வதின் மஹிமையால், அவர்கள் நெஞ்சத் தில் பெருகும் ஶமரஸம் வெளியிலும் வெள்ளமிட்டோடி, வநத்திலுள்ள ஸிம் ஹக ஜாதி சத்ருக்களையும், சத்ரு புத்தியைத் துறந்து பரஸ்பரம் ஸ்நேஹ விச்வாஸ ரஸங்களில் மூழ்கச் செய்கிறது. ஸிம்ஹங்களோடு கூட கஜங்கள் சத்ருபய மென்பதேயில்லாமல் மற்ற கஜ யூதங்களோடுகூட விளையாடுவதுபோல் பயலேஶ மில்லாமல் இன்பமாக க்ரீடை செய்கின்றன. [இங்கே ஸிம்ஹங்களோடு யானை கள் சத்ரு பயமே யில்லாமல் விச்வாஸத்துடன் நிர்ப்பயமாய் விஹரிக்கின்றன வென்பது மிக்க ரஸம். ஸிம்ஹம் பராக்ரம முடையது. அதற்குப் பயமில்லை. தன் பெருந்தன்மையால் அது தன் வைரத்தை விட்டுவிட்டு யானைகளுடன் விளையாட லாம். அது ஆச்சர்ய மல்ல. ஸிம்ஹத்தால் கொல்லப்படும் யானைக்கூட்டம் கொஞ் சமேனும் பயமில்லாமல் பல ஸிம்ஹங்களோடு கூட விளையாடுகின்றன. இந்த யானைக் கணத்தில் ஒன்றுகூட ஸிம்ஹத்துக்குப் பயப்படுவதில்லை. பல ஸிம்ஹங் கள் சேர்ந்த கூட்டத்தைக் கண்டும் அவை பயப்படுவதில்லை. 'வாஸுதேவ பராயணா நாதிபீதா நவசேஷ்டா' என்பர். 'ஶவஶீ நாதிபீதா' என்ப தால் அந்தப் பக்ஷத்தையும் ஸூசித்து, இந்த ஸ்தாநம் வாஸுதேவனுடைய அபரி பாக ஸம்ச்லேஷத்திலும் ஸமாதி யோகத்துக்கு நம்முடைய புண்யங்க ளெல்லாம் கூடிப் பரிணமித்த உத்தம ஸ்தாநமாக இருக்கிறது. அகஸ்த்ய பகவானைப் பின் பற்றும் மஹர்ஷிகளின் ஆச்ரமங்களும் இங்கே நிறைந்துள்ளன.

"இஹ ப்ரஶாந்தேஷு தபோவநேஷு
ப்ராயேண தேஷு ப்ரதிவநம் நதீஷு ।
ஶுநாஸதே வஹ்நிஶிகா யதா ஹம்ஸ
மாயா: ஸஜீவா இவ யக்ஷராஜா: ॥"

இந்தத் தபோவநங்கள் சாந்திரஸ ப்ரசுரம். 'ஶுநய: ப்ரஶாந்தா நா:' என்ற ச்லோ கத்திற் கூறியபடி, ப்ரஶமத்தையே ஸ்வபாவமாக உடைய க்ருஹ முநிகள் மார்

OFFICE OF THE REGISTRAR ... 22 APR 1947 MADRAS

ஹஸ்த்யத்தோடு தபோநிஷ்டரா யிருக்கிருர்கள். இவர்கள், '𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑌂' என்றபடி, ஸாங்க வேதாத்யாயிகளான தபஸ்விகள். இவர்கள் தங்கள் தர்ம பத்நிகளோடு அக்நி பரிசர்யா தீக்ஷாவ்ரத நிஷ்டர். இவர்கள் ஆஹிதாக்நி கள். 'வஹ்நிமாங்கள்' என்ற 'மது' ப்ரத்யயத்தினுல், நித்யமும் அக்நிபரி சர்யை செய்பவர் என்பது விளக்கப்படுகிறது.

'𑌅𑌨𑍍𑌵𑌾𑌸𑌿𑌤𑌮𑌰𑍁𑌨𑍍𑌧𑌤𑍍𑌯𑌾 𑌸𑍍𑌵𑌾𑌹𑌯𑍇𑌵 𑌹𑌵𑌿𑌰𑍍𑌭𑍁𑌜𑌮𑍍'

என்று ரகுவம்ஶத்தில் திலீபர் வஸிஷ்டாச்ரமத்தில் அருந்ததீ தேவி நிழல்போல் அருகில் பின்பு உட்கார்ந்திருக்கும் வஸிஷ்ட பகவானை வர்ணித்திருப்பதை '𑌅𑌨𑍍𑌵𑌾𑌸𑌿𑌤𑍇 𑌵𑌹𑍍𑌨𑌿𑌮𑌤𑍋 𑌯𑌥𑌾𑌹𑌂 𑌛𑌾𑌯𑌾 𑌇𑌵' என்பதால் ஸூசிக்கிருர். '𑌛𑌾𑌯𑍇𑌵𑌾𑌨𑍁𑌗𑌤𑌾 𑌸𑌦𑌾' என்று ஸீதா விவாஹ ப்ரகரணத்தில் ஸஹதர்ம சரீயான ஸீதை, நிழலைப்போல் ஸ்ரீ ராமனை ஸர்வ காலமும் பின் தொடர்ந்தே நடப்பதை ஜநகர் குறித்ததையும் நினைப்பூட்டுகிருர். பரமபதத்தில் எல்லோர்க் கும் பதியான பகவானை,

"𑌯𑍇𑌨 𑌯𑍇𑌨 𑌧𑌾𑌤𑌾 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌤𑍇𑌨 𑌤𑍇𑌨 𑌸𑌹 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿"

என்று ஓதியபடி நிழலைப்போல் முக்தர்கள் அநுஸஞ்சரணம் செய்வர். '𑌛𑌾𑌯𑌾' என்னும் உபமாநத்தில், நிழல் என்பது உயிருள்ள ஜீவனல்ல. இங்கே 'பதிவ்ர தைகளான பத்நிகள் எனும் சாயைகள் ஜீவனோடு கூடிய சேதந ஸ்த்ரீகள்' என்னும் வ்யதிரேகத்தை '𑌛𑌾𑌯𑌾𑌃 𑌸𑌜𑍀𑌵𑌾𑌃 𑌇𑌵' என்பதால் காட்டுகிருர். ராமன் தண்டகாவநம் செல்லுகையில் ஸீதை,

'𑌤𑍍𑌵𑌯𑌾 𑌚 𑌸𑌹 𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌗𑍁𑌰𑍁𑌜𑌨𑌾𑌜𑍍𑌞𑌯𑌾'

என்று தகப்பனுர் கந்யகாதாநம் செய்கையில் சொன்ன வார்த்தையை நினைப் பூட்டி, 'உம்முடைய நிழலின் அநுமமநத்தை எப்படி நீர் தடுக்க முடியாதோ, அப்படியே உம்முடைய சாயையான என்னை வநத்துக்குப் பின் தொடர்வதைத் தடுக்க ஸாத்யப்படாது' என்ருள்.

"𑌪𑌤𑌿𑌵𑍍𑌰𑌤𑌾 𑌚 𑌵𑍈𑌦𑍇𑌹𑍀 𑌛𑌾𑌯𑍇𑌵𑌾𑌨𑍁𑌗𑌤𑌾 𑌪𑌤𑌿𑌮𑍍 ।
𑌨 𑌜𑌹𑌾𑌤𑌿 𑌰𑌤𑌾 𑌧𑌰𑍍𑌮𑍇 𑌮𑍇𑌰𑍁𑌮𑌰𑍍𑌕𑌪𑍍𑌰𑌭𑌾 𑌯𑌥𑌾 ॥"

என்று அயோத்யாபுர ஜநங்கள் சாயோபமாநத்தைச் சொல்லி ஸீதையைப் புகழ்ந்தார்கள்.

விவேகர்:— [சுற்றிலும் பார்த்துக்கொண்டு]

"𑌤𑌾𑌮𑍍𑌰𑌪𑌰𑍍𑌣𑍀𑌤𑌟𑌾𑌨𑍍𑌤𑌾 𑌵𑌨𑌹𑌰𑌵𑍋 [illegible]
𑌤𑌾𑌮𑍍𑌬𑍂𑌲𑍀𑌵𑌲𑍍𑌲𑌿 [illegible] 𑌕𑍍𑌰𑌮𑍁𑌕𑌵𑌨𑌸𑍍𑌥𑌲𑍀 ।
𑌕𑌾𑌲𑍇 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌮𑌾𑌰𑍁𑌤𑌾 𑌵𑌿𑌦𑌧𑌤𑍇 𑌕𑌾𑌮𑌾𑌗𑍍𑌨𑌿𑌸𑌨𑍍𑌧𑍁𑌕𑍍𑌷𑌣𑌂
𑌕𑍁𑌞𑍍𑌜𑌾𑌨𑍍𑌤𑍇𑌷𑍁 𑌚 𑌸𑌞𑍍𑌜𑌯𑌨𑍍𑌤𑌿 𑌮𑌿𑌥𑌃 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑍈𑌕𑌸𑌾𑌮𑍍𑌯𑌂 𑌕𑌾𑌮𑌿𑌨𑌃 ॥"

தாம்ரபர்ணிக் கரையிலுள்ள சந்தந வநங்களையும், அவற்றை ஏலக்கொடிகள் சுற்றி அணைத்துக்கொண்டிருப்பதையும், பாக்குச் சோலைகளில் வெற்றிலைக் கொடிகள் பாக்கு மரங்களைச் சுற்றித் தழுவிக் கொண்டிருப்பதையும், தென்றல் காற்று வீசிக்கொண்டு காமத் தீயை மண்டச் செய்வதையும், கொடிகள் அடர்ந்துள்ள குஞ்ஜங்க ளென்னும் லதாக்ருஹங்களில் ஸ்வர்க்கத்திலுள்ள காமிகளான தேவ மிதுநங்களும் ஸ்வர்க்கத்திலும் இனிமையா யிருக்கிறதென்று ரஸித்துவந்து இன்ப

விஹாரங்கள் செய்வதையும் விவேகர் அழகாக வர்ணிக்கிறார். சந்தந வ்ருக்ஷங்களாகிய ஸுகந்த ப்ரிய காந்தர்களை ஏலக் கொடிகளாகிய பரிமள வாஸித ப்ரிய காந்தைகள் ஸ்வயம் க்ரஹமாக அணைந்து ஆலிங்கநம் செய்தவண்ணமாகவே இருக்கின்றன. தழுவின தழுவு ஓய்கிறதேயில்லை. தழுவு நெகிழ்ந்தால், பூமியில் விழுந்து கெடவேண்டி வரும்; உயிர் போகும். ஏலமும் சந்தநமும் பாக்கும் வெற்றிலையும் ப்ரியதம்பதிகளுக்கு ச்ருங்கார விஹாரங்களில் போகத்துக்கு ஸாதநமான த்ரவ்யங்கள். போகஸாதநங்களான இவை பரஸ்பரம் தாம்பத்ய ரஸத்தில் மூழ்குகின்றன வென்று ரஸம். பெண்ணின் ஸ்வயம் க்ரஹம் காந்தனுக்கு அரும்பெரும் பாக்ய மென்பர். கொடிகளுக்கும் வ்ருக்ஷங்களுக்கும் பெண்கள் கல்யாணோத்ஸவம் செய்விப்பர். இந்நதீ தீர வநங்களில் ஒரே ஸ்வயம்வரமாக இருக்கிறது. ரகுவம்ஶத்தில் இந்துமதீ ஸ்வயம்வரத்தில் பாண்ட்ய ராஜனையும், அவன் ராஜ்யத்தில் சேர்ந்த மலய வந ப்ரதேஶங்களையும் இந்து மதியின் தோழி ஸுநந்தை வர்ணிக்குமிடத்தில்,

“ தாம்பூலவல்லீபரிணத்தபூகா
ஸ்வேலாலதாலிங்கிதசந்தநாஸு ।
தமாலபத்ராஸ்தரணாஸு ரந்தும்
ப்ரஸீத ஶஶ்வந் மலயஸ்தலீஷு ॥ ”

என்கிற காளிதாஸ ச்லோகம் இங்கே ஸ்வாமி ஹ்ருதயத்தில் ஓடுவது திண்ணம், இங்கே அகஸ்த்யரை ‘[illegible]’ என்று வர்ணிக்கும்பொழுதும், இந்துமதீ ஸ்வயம்வராவஸரத்தில்,

“ விந்த்யஸ்ய ஸம்ஸ்தம்பயிதா மஹாத்ரே: நிஶ்ஶேஷபீதோஜ்ஜிதஸிந்துராஜ: ”
என்கிற ச்லோகம் ஸ்வாமி திருவுள்ளத்தில் இருந்தது திண்ணம். இந்த நதியின் தீரங்களில் முக்தரைப்போன்ற அகஸ்த்ய ஶடகோபாதிகள் வஸிப்பர். முத்துக்களைத் தரும் நதி இது. ‘முக்தா’ என்பதற்கு, ‘முத்து’ என்றும், ‘பெண் முக்தர்கள்’ என்றும் பொருள். முக்தரிலும் நாயகீ பாவத்தோடு முக்தி பெற்றவரென்று ரஸம். நதிக் கரையில் வெற்றிலைக் கொடிகள் கமுக மரங்களைக் கட்டி அணைத்துக்கொண் டிருக்கின்றன. இப்படி அக்கொடிகள் பாக்கு நிரம்பியுள்ள நதிக்கரையில், புளியடியிலுள்ள ஆழ்வார், அஶோக வநத்தில் ‘[illegible]’ என்றபடி ஸீதை புஷ்ப பல வ்ருக்ஷங்களைக் கண்ணெடுத்துப் பாராததுபோல், ‘.......தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்’ என்று இருந்தார். மலய மாருதம், ஏலம் சந்தநம் கமுகுமர வாஸனைகளோடு வீசிக் கொண்டு, காமிகளுக்குக் காமாக்நியை மேன்மேலும் வளரச் செய்யும். இக்காற்றுக்குத் ‘தக்ஷிண மாருதம்’ என்று பெயர். இது தாக்ஷிண்ய மில்லாமல் நெருப்பாகவே கொளுத்தும். ஸ்வர்க்கத்திலும் போகிகளுக்குக் காமப்ரதமாயும் காமத்தைப் பெருக்குவதாயும் இருப்பதாலும், அங்குள்ள மிதுநங்கள் இங்கே விஹரிக்க வருகிறார்கள். இப்படிப்பட்ட காமமயமான ப்ரதேசங்களிலும் முக்தர்களைப்போல மஹர்ஷிகள் காமத்தைத் துறந்தவராய் வஸிக்கிறார்களே என்பது ஆச்சர்யம். யோகத்தை ஆரம்பிப்பவர்களுக்கு இது ஸ்தாநமல்ல. யோகாப்யாஸத்தில் இறங்குபவர், ‘காவலிற் புலனை வைத்துக் கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து’ என்ற ஆவலிப் புடையர் அல்லர்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

வேதவித் சப்தார்த்த விவரணம்

[மதுராந்தகம் வித்வான் ஸ்ரீ. உப. தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி, திருவையாறு.]

அத்யயந விதியானது அக்ஷர ராசி க்ரஹண மாத்ரத்தையே பலமாகக் கொண்ட தென்பதாக நமது ஸித்தாந்தம். இதில் ஸ்ரீ பாஷ்யகார ஸித்தாந்தத்தைச் சேர்ந்தவர்களுக்கு யாதொரு விப்ரதிபத்தி லேஸமு மில்லை. வேத பாஷ்யகாரரும்,

"கெவலமவாகைஸ்ய வ்ராத்யத்வம் ந ஹவதீதெத்ததாவதெவ
நதஅ்ஷா மைஹவிஸிவஜாடநூதி"

என்பதாக, அத்யயந மாத்ரத்தாலேயே வ்ராத்யத்வாபாவ மாகிற பல முண்டென்கிறார். ஆகவே கேவலாத்யயநம் நிஷ்பலம் என்பதாகக் கொள்வதற்கில்லை. பராஸர ஸ்ம்ருதி 12-வது அத்யாயத்தில், அக்நி கார்யம், ஸந்த்யோபாஸநம், வேதாத்யயநம், ஆகிய இவை இல்லாதவர்கள் 'வ்ருஷளர்கள்' என்றும், வ்ருஷளத்வம் வாராமைக்காக வேதத்தின் ஏகதேஸத்தையாவது அவச்யம் அத்யயநம் செய்தல் வேண்டும் என்கிறார்.

["தஸ்மாகு வ்ரஷளஹீதெ ந ஸ ாஹ்ரணெ ந விஸெஷதஃ।
கயெ்த வெ்ரவெ்கதெஸொ யதி ஸவம் ந ஸக்யதெ॥"]

ஸமக்ரமாக வேதாத்யயநம் செய்யக் கூடாவிடினும், ஏகதேஸமாவது அத்யயநம் செய்வதால் வ்ராத்யத்வ பரிஹாரம் வருகிற தென்பது இதன் பொருள். அன்றிக்கே,

"யாஜயித்வா ஸ்ருதிஸுரஹத்வா நஸ்வாநுத்ரி ஸ்வாயத்யாயம் வெதஜயீத"

இத்யாதிகள் ப்ராயச்சித்த ரூபமாகவும் வேத பாடத்தை விதிக்கின்றன.

"ஜவாதிநா ஸ்வரூவெணாவி தஸ்காய நகவாத்வ"

என்பதாக, அக்ஷர ராசி மாத்ரத்தினால் புருஷார்த்த ஸாதந முண்டாகிறது என்பதாக ஸ்ரீ பாஷ்யம். 'வேத ஜபமே பரமதர்மம்; மற்ற தெல்லாம் உப தர்மம்' என்றும், 'அக்ஷரந் தோறும் ஹரிநாம ஸங்கீர்த்தந பலமுண்டு; ஸம்ஸயமில்லை' என்றும் ப்ரமாணங்கள் சொல்லுகின்றன.

இதை நம் ஸ்ரீ ஸம்பாதக ஸ்வாமி ப்ரஸ்தாவிக்கு மிடத்தில்,

"யெகவஜாஜ்ஜதவா வஹாணெ வெதம் விஷ்வாம்ஸஜஹி தொ வதஹி......................
தஸ்ாஸ்ாஹணெஹ்யா வெத விதொ்யா திவெ திவெ நஜக்ஷயஜாகு"

என்கிற வாக்யத்தில் சொல்லப்படும் வேதநம் அர்த்த ஜ்ஞாநத்தை விஷயமாக உடைய தென்று சொல்வதற் கிடமில்லை யென்று தாமே தமது குறிப்பில் ப்ரசுரம் செய்தருளியிருக்கிறார். இங்கு ச்ருதப்ரகாசிகாதி நிஷ்கர்ஷம் இன்ன தென்பதை விளக்க ப்ராப்தமாகிறது.

(1) ஸ்ரீ பாஷ்ய ச்லோக வ்யாக்யாநத்தில்:

“ வஹுஸூ-யாං- வஹுஸ்ரூஷேஹூாயெ-உ தாவீப-உம் யவா வெஉவிகூஆஸ்வி-

தி-தூாஉள வெஉாதிஸூஷா நாஂ ”

என்பது ச்ருதப்ரகாசிகை. ‘வெஉவிகூ’ என்கிற இடத்தில், ‘வேத பதமானது வேதார்த்த பதமாவது போல’ என்பதாக இதை த்ருஷ்டாந்தமாக்கியுள்ளார். (2) ‘வஹுஸ்ரூஷாய உவயஉஹ: வெஉவிதீ தூ ஆ வெஉஸூவகூ’ என்பதாக இங்கு ச்ருதப்ரதீபிகையும் காண்க. (3) இங்கு பாவப்ரகாசிகை உற்று நோக்கத்தக்கது. அதாவது:—‘வெஉவிகூ’ என்னுமிடத்தில், வேத சப்தத்துக்கே அர்த்த பரத்வம் இருப்பதாக ச்ருதப்ரகாசிகையில் உதாஹரிப்பானேன்? உத்தர பதமான ‘வித்’ சப்தமானது அர்த்த ஜ்ஞானபர மாகலாமன்றோ? இந்த சப்தத்தினல் ‘அவ்வோ அர்த்த விசேஷங்களை ப்ரதிபாதிக்கும் ப்ரகாரத்தோடு அறிகின்றான்’ என்று ஏற்படுமேயன்றி, வேத ஸ்வரூப ஜ்ஞாநமாத்ரம் இதனல் ஏற்படமாட்டாதே. மஹாபாஷ்யகாரரும், ‘கேவலம் வேதம் ஓதுகிறவனை ‘வேத’ என்று வ்யவஹரிப்பதில்லை. அர்த்த விசேஷம் அறிந்தவனே வேத எனப்படுவன்’ என்கிறார். இதனல் ‘வித்’ என்ற உத்தர பதமானது அர்த்த ஜ்ஞாநபர மென்றுதானே ஏற்படுகிறது. பூர்வ பதமான ‘வேத’ சப்தத்துக்கு அர்த்த பரத்வம் ஆவச்யகமென்று ஏற்படவில்லையே யெனில், ‘நாஉவிகூ’ என்ற விடத்தில் உத்தர பதத்தில் அர்த்த ஜ்ஞாந பரத்வம் கூடாது. அவ்வர்த்தம் ஆத்மாவன்றோ? அதற்கு வாசக சப்தம் தனியாக உள்ளதே. அதே ரீதியில் ‘உஜ்ஞவிகூ’ என்கிற விடத்தில் உத்தர பதமான ‘வித்’ சப்தத்துக்கு அர்த்த ஜ்ஞாநம் பொருளன்று. ‘உஜ்ஞ’ சப்தத்துக்கே ‘மந்த்ரார்த்தமான கர்மா அர்த்தம்’ எனக் கொள்ளல் வேண்டும். ஆகவே: உத்தர பதமான ‘வித்’ சப்தத்துக்கு அர்த்த ஜ்ஞாநபரத்வ நியமமில்லை. ‘வித்’ சப்த ஸமபிவ்யாஹாரம் உள்ள விடத்தில் ‘வேத முதலிய பூர்வ பதங்களுக்கு அர்த்தபரத்வ நியதி உண்டு என்கிற திருவுள்ளத்தாலேயே இதைச் ச்ருதப்ரகாசிகையில் உதாஹரித்தது. ‘வேதவித்’ என்கிற இடத்தில் ‘வேத’ சப்தமே அர்த்தபர மென்பதாக வ்யாஸார்யர் திருவுள்ளம். ‘வித் என்கிற உத்தரபதம் அர்த்த ஜ்ஞாநபர மாகலாமே; பூர்வ பதத்திற்கே அர்த்த பரத்வம் கொண்டது எதற்காக?’ என்பது சங்கை. ‘நாஉவிகூ’ என்ற இடத்திலும், அதை அடியொற்றி ‘உஜ்ஞவிகூ’ என்கிற இடத்திலும், ‘வித்’ சப்தத்துக்கு அர்த்த ஜ்ஞாந பரத்வம் கொள்வதற் கில்லை. ‘உஜ்ஞ’ என்கிற பூர்வபதத்திற்கே மந்த்ரார்த்த பரத்வம் கொள்ளல் வேண்டும். அதைப்போலவே, ‘வெஉவிகூ’ என்கிற இதிலும், ‘வேத’ பதத்துக்கே வேதார்த்த பரத்வம். ஆகவே, முதல் பதமாகிய ‘வஉ’ சப்தத்துக்கு அர்த்த பரத்வத்திற்கு முதல் பதம் அர்த்தபரமாகிய உதாஹரணம் ‘வெஉவிகூ’ என்பது எனது ஸமாதாநம்.

(4) ‘உஜ்ஞவிகூ’ என்பதற்கு ‘உஜ்ஞவூயா நகஉஉமிஷ:’ என்று உபநிஷத் பாஷ்யம். ‘உஜ்ஞ’ சப்தத்துக்கு மந்த்ரார்த்த பரத்வத்தையே அங்கும் ஸ்தாபித்தாராயிற்று. அர்த்த ஜ்ஞாநத்துக்கு வேதாங்கங்களின் அத்யயநம் அபேக்ஷிதம் என்பதாக ஸம்பாதக ஸ்வாமியே குறிப்பிடுகிறார். பூம வித்யாரம்பத்தில், வ்யாகரணம் இதிஹாஸம் புராணம் தர்க்கம் முதலியவற்றில் தமக்குப்

பாண்டித்ய மிருப்பதாக நாரதர் தாமே சொல்லியிருக்கிறுர். அர்த்த ஜ்ஞாநத்துக்கு அபேக்ஷிதமான அங்க ஜ்ஞாந ஸம்பத்தி தமக்கிருக்க, மந்த்ர ஸ்வரூப மாத்ரமே தெரியும்; அதன் அர்த்தம் தெரியாதென்று கொள்ள முடியுமா? 'அநுஷ்டேயார்த்த ப்ரகாசகங்களான மந்த்ரங்களின் அர்த்தமாகிய கர்மாவை அறிந்திருக்கிறே னத்தனைபோக்கி, ப்ரஹ்ம ஸ்வரூபத்தை அறியவில்லை' யென்று கொள்வதற்கு என்ன ஆக்ஷேபம் இருக்கக்கூடும்?

(5) மேலும் 'வெஉஷஹூ◌யாழ' என்கிற விடத்தில், பூர்வபதத்துக்கே அர்த்த பரத்வம் கொண்டதற்கு உபபாதகமாக 'உஜ்ஞவிக' என்பதை நிதர்சந மாக்கியதும், மந்த்ரபதம் அர்த்தபர மானலன்றிச் சேரமாட்டாது. மஹாபாஷ்யத்தில் 'சுயஷா ஹிஜுவைய வெஉ தர்ய◌அர்ஹ' என்றதானல் 'விஉ' தாதுவிற்கே அர்த்த ஜ்ஞாநபரத்வம் ஏற்படுகிறதென்று கொண்டு, பூர்வ பதம் அர்த்தபர மாகைக்கு இதில் ஸம்ப்ரதிபத்தி யில்லையாகில், 'உஜ்ஞ ஸாகூஷா தாஸவாநு' என்பதாகப் பூர்வ பதம் அர்த்தபரமாக வுள்ள உதாஹரணம் கொள்க என்று மேலே பாவப்ரகாசிகை.

(6) ஸ்வாமி தேசிகன் ஸேச்வர மீமாம்ஸையில்:—

"கூஜ தஷாஸஉவஹவிஅாஸி தகஉஷாணஉவிஷ்வேதநா நயிகாஸிண
உஹிஹொதாஷிவியயொ ந ஸஹஸாஉயிகஉவஷஜி"

என்று அர்த்த ஜ்ஞாந மில்லாதவனை அவித்வானைக் கண்டரவேண அருளியிருப்பது நோக்கத்தக்கது.

(7) மேலும் ஆரண்யகம் இரண்டாவது ப்ரச்நத்தி லுள்ளது உதாஹ்ருத வாக்யம். 'ஸ்வாத்யாய ப்ராஹ்மணம்' என்பது அதற்குப் பெயர். ப்ரஹ்ம யஜ்ஞத்தைப் பற்றி விதி அங்கு. இதிஹாஸ புராண கல்பஸூத்ராதிகளையும் ப்ரஹ்ம யஜ்ஞத்தில் அநுஸந்திக்க விதித்துள்ளது இந்த ச்ருதி. ஆச்வமேதிகம், யாஜ்ஞவல்க்ய ஸம்ருதி, சாஸ்த்ர தீபிகை முதலியவற்றிலும், கல்ப ஸூத்ர இதிஹாஸ புராணங்களை ப்ரஹ்ம யஜ்ஞத்தில் ஓதும்படி விதித்திருக்கிறுர்கள். மூலம் இந்த ச்ருதியே. ஆகவே: ஸாங்காத்யயநத்தால் அர்த்த ஜ்ஞாநம் பெற்றுள்ள அதிகாரியே இந்த ச்ருதிக்கு விஷயம் என்பது ஸுஸ்பஷ்டம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

திருவேங்கடவன் திருக்குறள்.

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.]

[ஸ்ரீ. உப. ப. ரே. திருமலே ஐயங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி,

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

“ மூன்றி லோருமூன்று மூவிரண்டு முந்நான்குந்
தோன்றத் தொலையுந் துயர்.”

இதற்கு உரை :—I. பௌராணிக மத சித்தாந்தம் யாதெனில் :—மூன்றில் – பறவையில், கருடனில் ; ஒரு மூன்று – திரிமூர்த்தி சொரூபராகிய எம்பெருமான், விண்டு ; மூவிரண்டு – ஆறு : ஷட்குணம், ஷாட்குண்ணிய பரிபூரணராய கன்னி, திருமகளென்னும் பிராட்டியாரோடு ; முந்நான்கும் – பன்னிரண்டு, துவாதச அடியார்களாகிய ஆழ்வாராதிகள் சூழ; முந்நான்கும் – ஐந்து, ஸ்ரீமத் பஞ்சாயுத பாணியாக; தோன்ற – சேவை சாதிக்க ; தொலையும் துயர் – துன்பம் நீங்கும்.

இதன் கருத்து :—பறவை யென்னுங் கருடாழ்வான்மீது, திரிமூர்த்தி சொரூபராகிய எம்பெருமானுகிய விண்டு, ஷாட்குண்ணிய பரிபூரணராய்த் திருமகள் என்னும் பிராட்டியாரோடு, துவாதச அடியார்களாகிய ஆழ்வாராதிகள் சூழ, ஸ்ரீமத் பஞ்சாயுத பாணியாக எழுந்தருளிக் கல்யாண குணத்துடன் சேவை சாதிக்க, நமது துன்பங்கள் தொலையும்.

II. அத்துவைதம் :—மூன்றில் – காரணம், சூக்குமம், தூலம் என்கிற மூன்று தேகத்தினுள் ; ஒரு மூன்று – காரண தேகத்திற் குரிய மூன்று தத்துவங்களின் சொரூப ரூப சுபாவங்களும் ; மூவிரண்டு – சூக்கும தேகத்திற் குரிய ஆறு தத்துவங்களின் சொரூப ரூப சுபாவங்களும்; முந்நான்கு – ஸ்தூல தேகத்திற்குரிய பன்னிரண்டு தத்துவங்களின் சொரூப ரூப சுபாவங்களும் ; தோன்ற – ஐயந் திரிபு மயக்க மின்றித் தோன்ற அத்தருணத்தே ; துயர் – பிறவித் துன்பம் ; தொலையும் – நீங்கும்.

இதன் கருத்து :—காரணம் சூக்குமம் தூலம் என்கிற மூன்று தேகத்தினுள், காரண தேகத்திற் குரிய மூன்று தத்துவங்களின் சொரூ ரூப சுபாவங்களும், சூக்கும தேகத்திற் குரிய ஆறு தத்துவங்களின் சொரூப ரூப சுபாவங்களும், ஸ்தூல தேகத்திற் குரிய பன்னிரண்டு தத்துவங்களின் சொரூப ரூப சுபாவங்களும், ஐயந் திரிபு மயக்க மின்றித் தோன்ற அத்தருணத்தே பிறவித் துன்பம் நீங்கும்.

III. சிவாத்துவைதம் :—ஒரு மூன்று மூவிரண்டு முந்நான்கு – 3 + 6 + 12 = (21) இருபத்தொன்றினை; மூன்றில்–மூன்றில் கொடுக்கவந்த தொகையாகிய (21 ÷ 3) = 7, காலம், நியதி, கலை, புருடன், மாயை, ராகம், வித்தை யென்

னும் ஏழு தத்துவங்களின் சொரூப ரூப சுபாவங்களும்; தோன்ற—சந்தேகம் விபரீதம் அஞ்ஞானம் அறத் தோன்ற; தொலையும் துயர் — துயர் தொலையும்.

இதன் கருத்து:—3 + 6 + 12=21, இருபத்தொன்றினை மூன்றில் கொடுக்க வந்த தொகையாகிய (21÷3)=7—காலம், நியதி, கலை, புருடன், மாயை, ராகம், வித்தை யென்னும் ஏழு தத்துவங்களின் சொரூப ரூப சுபாவங் களும், சந்தேகம் விபரீதம் அஞ்ஞானம் அறத் தோன்றத் துயர் தொலையும்.

IV. விசிட்டாத்துவைதம்:— சித்து, அசித்து, சிதசித்து என்கிற தத் துவத் திரயங்களில்; ஒரு மூன்று—சித்தினிடத்து இச்சை அறிவு தொழில் என்கிற மூன்று குணங்களும்; மூவிரண்டு—அசித்தினிடத்து மயக்க மின்மை, திரிபின்மை, ஐயமின்மை, விசித்திரமின்மை, அசுத்தமின்மை, விகார மின்மை, என்கிற ஆறு குணங்களும்; மூநான்கு—சிதசித்தினிடத்து அறிவு, கருணை, அன்பு, வாய்மை, நிராசை, தூய்மை, நிறைவு, ஒழுக்கம், பொறை, செப்பம், சால்பு, மறதியின்மை என்கின்ற பன்னிரண்டு குணங்களும் ஆகக் கூடி சித்து அசித்து சிதசித்து என்னும் மூன்றின் குணங்களாகிய இருபத்தொன்றின் சொரூப ரூப சுபாவங்கள் ஐயந்திரிபு மயக்கமின்றி; தோன்ற—விளங்க; துயர் தொலையும்—துன்பமாகிய சகல கேவலங்கள் நீங்கும்; சுத்தனுவோம்.

இதன் கருத்து:—சித்து, அசித்து, சிதசித்து என்கிற தத்துவத் திரயங் களில், சித்தினிடத்து-இச்சை, அறிவு, தொழில் என்கிற மூன்று குணங்களுப்; அசித்தினிடத்து - மயக்கமின்மை, திரிபின்மை, ஐயமின்மை, விசித்திர மின்மை. அசுத்தமின்மை, விகாரமின்மை, என்கின்ற ஆறு குணங்களும்; சிதசித்தி னிடத்து - அறிவு, கருணை, அன்பு, வாய்மை, நிராசை, தூய்மை, நிறைவு, ஒழுக் கம், பொறை, செப்பம், சால்பு, மறதியின்மை, என்கின்ற பன்னிரண்டு குணங்களும், ஆகக்கூடி சித்து அசித்து சிதசித்து என்னும் மூன்றின் குணங் களாகிய இருபத்தொன்றின் சொரூப ரூப சுபாவங்கள் ஐயந்திரிபு மயக்கமின்றி விளங்க, துன்ப மாகிய சகல கேவலங்களும் நீங்கும்; சுத்தனுவோம்.

இதன் முழு விவரமும் "திருவருட்பா ஆறுவது திருமுறை (பக்கம் 114-115). 169—வேதாந்த தேசிகர் குறட்பா" என்ற பகுதியிற் காண்க. அங்குள்ள குறிப்பு வருமாறு:—

"இஃது, உபதேசம் விரும்பிய ஓர் வடகலை வைஷ்ணவர்க்குச் சுவாமி கள் வேதாந்த தேசிகர் இயற்றிய குறட்பாவுக்கு உரை விளக்கியவாறு எனத் தெரிகிறது." பிறிதோரிடத்தில் 'ஒரு பாட்டிற்கு நான்கு உரை' என்ற தலைப் பின் கீழ் "மற்றொரு சமயம் வைணவ ரொருவர் தேசிகர் அருளிய 'மூன்றி லொரு..............துயர்' என்னுந் திருக்குறட் பாவுக்கு உரை யருளல் வேண்டு மென வினயத்தோடு வேண்ட, வள்ளலாரும் அக்குறட்பாவுக்குப் பௌராணிக மத வுரை, சமயவுரை, சமயாதீத உரை, மற்றுமோர் உரை ஆகிய நான்கு உரைகளையும் உரைத்தருளினர்" (சரித்திரச் சுருக்கம்) என்று குறிக்கப் பெற்றுள்ளது.

இங்கு விசாரிக்கப் பெறும் திருக்குறள் வெண்பா 'ரஹஸ்யபதவீ' எனும் ரஹஸ்யத்தின் ஈற்றில் உள்ளது. இக்குறள் ஆண்டுக் கூறிய விஷயங்களைச் சுருக்க உரைக்கின்றமையின் அவ்விரஹஸ்யத்தின் சில பகுதிகளை அங்ஙனே தருவல். "அநாதி காலம் ஸம்ஸரித்துப் போந்த ஜீவாத்மாக்களுடைய உஜ்ஜீவ நார்த்தமாக அத்யாத்ம சாஸ்த்ரங்கள் தத்வ ஹித புருஷார்த்தங்களை ப்ரதிபாதிக்கும். அவற்றை ஸங்க்ரஹேண ரஹஸ்யத்ரயம் ப்ரகாசிப்பிக்கும். இவற்றில் திருமந்திரம் ஸர்வ ஸங்க்ரஹம். இதில் ப்ரதம பதமான ப்ரணவம் ஸாரதம ஸங்க்ரஹம். இது மூன்று பதமாய் மூன்று அக்ஷரமாயிருக்கும். * * ஆக: இப்ரணவத்தால் 'கண்ணபுரமொன் றுடையானுக்கு அடியேன் ஒருவர்க் குரியனோ' என்கிறபடியே இஜ்ஜீவாத்மா பகவ தநந்யார்ஹ சேஷபூதன் என்ற தாயிற்று. மத்யம பதமான நமஸ்ஸு இரண்டு அக்ஷரமாய் இரண்டு பதமாய் (நான் எனக்கு உரியேனல்லேன்; என் காரியத்துக்கு நிரபேக்ஷ ஸ்வதந்த்ரனு மல்லேன்) என்கிறது. இங்கே பாகவத சேஷத்வம் பலிதம். இந்நமஸ்ஸுக்கு சரணாகதியிலும் தாத்பர்யம். * * * நாராயண சப்தம் — நாரங்களுக்கு அயந மென்றும், நாரங்களை அயநமாக உடையவன் என்றும் ஸர்வாதாரத்வாதி விசிஷ்டனான ச்ரிய: பதியைச் சொல்லுகிறது. * * * 'அகாரார்த்யாயைவ' என்கிற ச்லோகத்தை இங்கே அநுஸந்திப்பது. இப்படி திருமந்த்ரத்தில் ஸங்க்ரஹீதங்களான தத்வஹித புருஷார்த்தங்களை விசதமாக்குகிறது த்வயம். இதில் பூர்வ கண்டம் ஒரு வாக்யமாய் உபாயபரம். உத்தர கண்டம் இரண்டு வாக்கியமாய் உபேயபரம். இவை ஒரொன்றும் மூன்று பதமாயிருக்கும். * * * ஸ்ரீமானான நாராயணன் திருவடிகளில் களையற்ற நித்ய கைங்கர்யம் பெறுகைக்கு ஸ்ரீமானான நாராயணன் திருவடிகள் இரண்டையும் சரணமாகப் பற்றுகிறேன் என்று இதில் திரண்ட பொருள். இப்படி திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் ப்ரகாசித்த உபாயத்துக்கு அகிஞ்சநாதிகாரித்வ நிரபேக்ஷதாதித் வாதிகளைக் காட்டிக்கொண்டு, விதி முகத்தாலே உபப்ரஹ்மணம் பண்ணுகிறது சரம ச்லோகம். இது தான் மூன்று வாக்யமாய்ப் பன்னிரண்டு பதமாயிருக்கும். இப்படி ரஹஸ்யத்ரயம் உத்தரோத்தரம் பதங்கள் இரட்டிப்பாய் விசதீகரண மாய் இருக்கும். இச்லோகத்தில் ப்ரதம வாக்யம் உபாய விதாயகம்; மத்ய வாக்யம் பல ப்ரதிபாதகம்; உத்தர வாக்யம் க்ருதக்ருத்யத்வாதி தத்பரம். * * * த்வயத்தில் பூர்வோத்தர கண்டங்களுக்கு இதில் பூர்வோத்தரார்த்தங் கள் சேர்த்தியாகின்றன."

ஸதாசார்ய கடாக்ஷம் உடையனான சரணாகதனுக்கு ரஹஸ்யத்ரயார்த்தம் நித்ய போக்யம். இவற்றில் திருமந்த்ரம் ஸர்வ ஸங்க்ரஹம். 'திருமந்த்ரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து த்வயைக நிஷ்டராவீர்' என்பது பூர்வர்கள் பாசுரம். திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் ப்ரகாசித்த உபாய விசேஷத்தை அதிகா ராதிகளுடனே கூட விதி முகத்தாலே வெளியிடுகிறது சரமச்லோகம். இத் தால் ஸுபரிகரமாக ஸுதுஷ்கரமாய்ச் சிரகால ஸாத்யமான உபாயாந்தரம்; அல்ப ஜ்ஞனாய் அல்பசக்தியாய் அல்பகால வர்த்தியான தனக்குத் தலைக்கட்ட அரி தென்று சோகித்தவனுக்கு ஸாங்கமாக ஸுகரமாய் ஸக்ருத் கர்த்தவ்யமான உபாய விசேஷத்தை உபதேசித்து 'நீ சோகிக்கவேண்டாம்' என்கிறான்.

திருவேங்கடவன் திருக்குறள் சப்தார்த்தம் தெரிந்தாலும், தாத்பர்யார்த்தம் ஸாமாந்யர்களுக்குத் தெரியாதிருக்குமாறு மறைத்துக் கூறப்பெற்ற கௌடரீதியில் ப்ரஸாத குணமுடையதாய் உள்ளது. இதன் ஒவ்வொரு பாதமும் சீர்தோறும் அநுப்ராஸம் உடையதாயும், மூன்று என்னும் ஸங்க்யாவாசகம் த்விகுணிதோத்தர க்ரமம் உடையதாய்க் கொண்டு, திருமந்திரமும் த்வயமும் சரமசுலோகமும் ஆகிய ரஹஸ்யத்ரயங்களிலுமுள்ள பதங்களை ஸூசிப்பனவாயும் இருக்கும்படி ஸாதித்திருப்பது மிகவும் அதிசயிக்கத்தக்கது. வடமொழியில் எண்ணுப் பெயர்களில் சங்கியாவாசகம் என்றும் சங்கியாபூரண வாசகம் என்றும் இரண்டு வகையுண்டு. இவற்றின் இலக்கணம் பாணிநீயத்தில் விளக்கப் பெற்றுள்ளது. பரிபாடல் முதலிய சங்க நூல்களிலும் பயிலப் பெற்றுள்ளது. இரு சொற்களைக் கெல்லை தேர்ந்த நம் வேதாந்த குரு "அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக், குறுகத் தறித்த குறள்" என்றே போற்றும்படி, சொற்சுருக்கமும் பொருள் விரிவும் அடக்கி யருளிய இத்திருக் குறட்பாவுக்கு உவமான மாகத்தக்கது ஒன்றில்லை யெனின் அது உற்றது உரைத்தலேயாம். வாழ்க திருவேங்கடவன் திருக்குறள். வளர்க அவன் புகழ். ஓங்குக அவன் சீர்த்தி. வாழ்க வைய மெலாம்.

---

(1)

வ்யய ஹு பங்குனி ஸ்ரீ 5உ செவ்வாய்க்கிழமை ராத்ரி 3-மணிக்கு ஆக்கூர் ஆண்டவன் ஸ்ரீ ஸ்ரீநிவாஸமஹாதேசிகன் ஸ்ரீரங்கம் சின்னாச்ரமத்தில் ப்ருந்தாவநம் கண்டருளினர். வ்யய ஹு பங்குனி ஸ்ரீ 15உ (28-3-47) வெள்ளிக்கிழமை தினம் நடந்த மஹாராதநத்தில் மஹான்களான ஸ்வாமிகளும் ஸ்த்ரீ ரத்நங்களும் ஆராதநங்களில் அநேக விதமான வஸ்த்ராபணங்களும், ரஜதமயமான சொம்பு ஸ்தாலிகளும் ஸமர்ப்பித்தார்கள். அந்தந்த தினங்களில் ஆயிரக்கணக்கான ஸ்வாமிகளுக்கும் ஸ்த்ரீகளுக்கும் அத்யுத்க்ருஷ்டமான பக்ஷ்ய போஜ்யாதிகளுடன் ததியாராதநம் நடைபெற்றது.

க. வே. பாஷ்யம் தாஸன்:

சிங்கப்பெருமாள் கோவில். 5-4-1947.

(2)

ஸ்ரீமத் அஹோபில மடத்தின் சரித்ர ஸங்க்ரஹம் [இங்க்லீஷ்.] விலை 0—8—0 தபால் சார்ஜ் வேறு. கிடைக்குமிடம்:—எஸ். என். வேங்கடேச ஐயர், அட்வோகேட், கோயம்பத்தூர். P. O.

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ கல்யாணுபிவர்த்தி நீ ஸபாவின் வார்ஷிகக் கொண்டாட்டம்.

ஷை ஸபாவின் ஐந்தாவது வார்ஷிகக் கொண்டாட்டமானது, ப்ரக்ருதம் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கரால், ஸ்ரீ மதுராந்தகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள வடமொழிக் கல்லூரியில், 23-3-47 ஞாயிற்றுக்கிழமை பகல் 3-மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு வெகு விமர்சையாயாக நடந்தேறியது. சென்னையில் 'ஸ்ரீ பாஷ்யகார ஸித்தாந்த வர்த்திநீ' வடமொழிக் கலாசாலையின் தலைமை யாசிரியர் ஸ்ரீ. உ.ப. T. S. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, நம் ஸபைக்குத் தலைமை வஹிக்கும்படி ஏற்கனவே ப்ரார்த்திக்கப்பட்டு இவ்விடம் எழுந்தருஸி யிருந்தார். ஸபை ஆரம்பமாகு முன், இக்கலாசாலையின் ந்யாயாத்யாபகரான வேதாந்த வாவதூக ஸ்ரீ.உ.ப. P. நாராயணுசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உ.ப. T. S. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியைத் தலைமை வஹிக்கும்படி ப்ரார்த்திக்க, ஸ்வாமியும் இசைந்து அக்ராஸநம் வஹித்தார். பின்னர் தலைவர்க்கு ஸபா கார்யதர்சிகளால் ஸ்வாகத நிவேதந பத்ரம் படித்துக் கொடுக்கப்பட்டது. அதன் பின்னர் அக்ராஸந ஸ்வாமி, "தர்மம்" என்னும் விஷயத்தைப்பற்றி விரிவாகவும் அழகாகவும் செவிக்கினிமை பட உபந்யஸித்தருளினர். அந்த ஸபா கொண்டாட்டத்தை இனிது நடத்தவும், ஸ்வாமியின் உபந்யாஸத்தைக் கேட்டுக் களிக்கவும், அநேக ப்ரமுகர்களும் பண்டிதர்களும் மஹா மண்டபத்தில் கூடியிருந்தனர். உபந்யாஸாநந்தரம் இக்கலாசாலையின் அத்யாபகர் ஸ்ரீ. உ.ப. M. S. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ஸபையின் சார்பாகத் தலைவர்க்கு நன்றி கூறினர். கலாசாலாத்யக்ஷ ஸ்வாமி, உடனிருந்து ஸகல வ்யாபாரங்களையும் வெற்றிபெற நடத்தி வைத்தார். மங்கள வாழ்த்துடன் ஸபையின் கொண்டாட்டம் இனிது நிறைவேறியது.

* * * *

ஸ்ரீ கல்யாணுபிவர்த்தி நீ ஸபையின் உபந்யாஸங்கள்

ஷை ஸபையின் சார்பில் பின்வரும் பொதுக்கூட்டங்கள் நடந்தன. அவற்றின் வரலாறுகள் வருமாறு:—

1. 6—2—47 வியாழக்கிழமை ஸாயம் 4½-மணிக்கு, பாடசாலை ந்யாயாத்யாபகர் ஸ்ரீ. உ.ப. ஸம்பத்குமார வரதாசார்ய ஸ்வாமி தலைமையில், T. ஸ்ரீநிவாஸனல் "ஸ்ரீமொஹிஷவெஷ ரவிஷெவ்ஹணவ" என்றும் விஷயம் எழுதிப் படிக்கப்பட்டது.

2. 13—2—47 வியாழக்கிழமை ஸாயம் 3½-மணிக்கு வ்யாகரணுத்யாபகர் ஸ்ரீ. உ.ப. வரதராஜையங்கார் ஸ்வாமி தலைமையில், N. க்ருஷ்ணமாசாரியால் "ஶூஹஷூரூஉஷ்யாவஶ்யகதா" என்னும் விஷயம் உபந்யஸிக்கப்பட்டது.

3. 28—2—47 வெள்ளிக்கிழமை ஸாயம் 2½-மணிக்கு ஆங்க்லோபாத்யாயர் ஸ்ரீ. உ.ப. வாஸுதேவாசார்ய ஸ்வாமி தலைமையில், A. T. கல்யாண வரதனல், "வஸுஷாயஃ" என்னும் விஷயம் எழுதிப் படிக்கப்பட்டது.

4. 3—3—47 திங்கட்கிழமை ஸாயம் 2 மணிக்கு, ஸ்ரீ கார்யம் ஸ்ரீ. உ.ப. ஜோஸ்யம் ரங்காசார்ய ஸ்வாமி தலைமையில், முக்கூர் வித்வான் ஸ்ரீ. உ.ப. ராஜகோபாலாசார்ய ஸ்வாமி, "ஊஹூண வஶிதயாமஷ்யாவஶ்யகதா" என்னும் விஷ

யத்தை உபந்யாஸித்தார். பிறகு ந்யாயாத்யாபகர் வேதாந்த வாவதூக ஸ்ரீ. உப. நாராயணாசார்ய ஸ்வாமி தந்ய வாதம் கூறினர்.

நடந்த எல்லாக் கூட்டங்களிலும் அத்யாபகர்கள் யாவரும் ப்ரஸந்நமா யிருந்தனர்.

சில தனிக் கூட்டங்கள் :—2—3—47 ஞாயிற்றுக்கிழமை ராத்ரி ஸ்ரீ. உப. முக்கூர் ராஜகோபாலாசார்ய ஸ்வாமி "வத்ஸலா கல்யாணம்" என்னும் விஷயத்தையும், 3-3-47 திங்கட்கிழமை ராத்ரி "ஏகாதசி மஹாத்ம்யம்" என்னும் விஷயத்தையும் பரக்க உபந்யஸித்தார்.

T. ஸ்ரீநிவாஸன்,
T. C. க்ருஷ்ணமாசாரி,
(காரியதர்சிகள்.)

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

ஸர்வஜித் ஹூ சித்திரை மீ.

[பிழை திருத்தம்—ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தீ, சித்திரைமீ 21உ ஞாயிற்றுக்கிழமை 20உ சனிக்கிழமை அன்று த்ரயோதசீ வேதை காரணம். ஞாயிறு பௌர்ணமியாக இருந்தாலும் ராத்ரி பாரணை.]

ஸர்வஜித் ஹூ வைகாசி மீ

1உ	வியாழக்கிழமை ...	சூந்ய திதி
2உ	வெள்ளிக்கிழமை ...	சூந்ய திதி : ஸர்வ ஏகாதசி வ்ரதம்
3உ	சனிக்கிழமை ...	வ்ருஷப க்ருஷ்ண த்வாதசி திதி
5உ	திங்கட்கிழமை ...	39-ம் பட்டம் ராஜமன்னார் கோவில் ஸ்ரீ பராங்குச யதீந்த்ர மஹா தேசிகன் திரு நக்ஷத்ரம்
6உ	செவ்வாய்க்கிழமை ...	ஸர்வ அமாவாஸ்யை
8உ	வியாழக்கிழமை ...	வ்ருஷப சுக்ல த்விதீயை - த்ருதீயை திதி த்வயம்
9உ	வெள்ளிக்கிழமை ...	வ்ருஷப சுக்ல சதுர்த்தி திதி
16உ	வெள்ளிக்கிழமை ...	ஸர்வ ஏகாதசி
19உ	திங்கட்கிழமை ...	ஸ்ரீ நம்மாழ்வார் திரு நக்ஷத்ரம்
20உ	செவ்வாய்க்கிழமை ...	பௌர்ணமி திதி : சந்த்ர க்ரஹணம் *
21உ	புதன்கிழமை ...	35-ம் பட்டம் களத்தூர் ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் திரு நக்ஷத்ரம்
30உ	வெள்ளிக்கிழமை ...	வ்ருஷப க்ருஷ்ண தசமி திதி
31உ	சனிக்கிழமை ...	வ்ருஷப க்ருஷ்ண ஏகாதசி திதி

* சந்த்ர க்ரஹணம் :—வைகாசிமீ 20உ [3—6—47] செவ்வாய்க்கிழமை பௌர்ணமி கேட்டை நக்ஷத்ரத்தில் பார்ச்வ ஸோமோபராகம் ஸம்பவிக்கும்.

			மணி	நிமி.
ஸ்பர்ச காலம்	..	ராத்ரி	12	26
மத்ய காலம்	...	,,	12	45
மோக்ஷ காலம்	...	,,	1	4
				38

அன்று பௌர்ணமாஸி திதி ச்ராத்தம் பண்ணலாம். பகல் 3½ மணிக்குள் போஜநம் முடித்துக் கொள்ளப்படவேண்டும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஹயக்ரீவ பரப்ரஹ்மணே நம:

லோக ஹிதைஷிணி

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர், M.A., L.T., வித்வான், திருவையாறு.]

வெகு ஸமீபத்தில் நிகழ்ந்த ஹிந்து மஹாநாட்டில் கொண்டுவரப் பெற்ற தீர்மானங்களுள் ஒன்று, பிற மதஸ்தர்கள் ஹிந்துக்களைத் தங்கள் கொள்கைக்கு இழுத்துக்கொள்ளும் 'கன்வர்ஷன்' முறையைத் தடுக்குமாறு அரசாங்கத்தாரை வேண்டிக்கொள்வதாகும். இத் தீர்மானத்தை மனதார ஆமோதித்தவர்களில் அடியேன் ஒருவன். ஆனால் இதை நிறைவேற்றிவைப்பதில் நம்முடைய கடமையே மிகப் பெரிதென அடியேனுக்குத் தோன்றுகிறது.

நம் சிறுவர் சிறுமியருக்கு 'மதக் கல்வி' என்பதே இல்லாமல் போய்விட்டது. மதக் கல்வி என்பது ஸகல லௌகிக கார்யங்களையும் அடியோடு ஒழித்து, பிறகு ஒரு குருவை நாடி அவர்கள் உள்ளங் குளிர்ந்த பிறகு அறியத்தக்க ரஹஸ்யமாக இருக்கிறது. இம்மாதிரியான ஸந்தர்ப்பங்கள் வாழ்க்கையில் எல்லாருக்குமே கிடைக்குமா? மேலும் ஸம்ப்ரதாயம், ஆசார்ய வரணத்திலும் நல்ல ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது. தார்மிகனான ஒரு லௌகிகன், தான் நினைத்தபடி ஒரு ஸதாசாரியனிடம் உட்கார்ந்து காலக்ஷேபம் செய்துவிட முடியும் நிலையில் இல்லை. இந்த எண்ணத்தை மீறி, மனம் அன்பு செய்யுமிடத்தில் சென்று சேர ஸ்ரீ வைஷ்ணவனுக்கு உரிமை குறைவு என்றே சொல்லலாம்.

'ஸ்த்ரீகளுக்குத் தாய் தந்தையர்க்கும் பர்த்தாவுக்கும் செய்யும் இந்த சுச்ரூஷையே வீடு தரவல்லது' என்கிற ஸாமான்ய விதியினால், மதக் கல்வி அவர்களை எட்டுணையும் அடைகிறதில்லை. அதிலும் நம் வடகலை ஸம்ப்ரதாயத்தி லுள்ளவர்க்கு ஆழ்வார்கள் ஆசார்யர்கள் இவர்களைப்பற்றிச் சிறிதளவும் தெரியாது. பரமபாகவதராய் நித்ய ஸூரி கல்பர்களான மஹான்களுடைய திருவடி ஸேவையில் ஈடுபடும் பெண்மணிகளுக்கும் இந்த நிலைமையே பெரும்பாலும் இருந்து வருகிறது. 'ஸ்த்ரீ சூத்ர த்விஜ பந்தூநாம் த்ரயீ ந ச்ருதி கோசரா' என்ற விதிரத்நம் நமக்கு இருந்தபோதிலும், ஆசார்யர்களால் உண்டான நன்மையை எளிதில் யாவரும் பெற முடிகிறதா? இல்லையே. ஒரு கிராமத்திலோ நகரத்திலோ கிரிஸ்தவர்கள் இருந்தால், அவர்களுடைய ஆசாரியர்கள், தம் ஒவ்வொரு சிஷ்யரின் வீடுதோறும் சென்று, அவர்களுடைய நித்ய வாழ்க்கையில் கலந்து, கலங்கியபொழுது தெளிவித்து, துயருற்றபொழுது தேற்றி, நலிந்தபொழுது ஊக்கி, பசித்தபொழுது உணவூட்டி, ஐஹிக ஆமுஷ்மிகத்திற்கு நம் கண்கூடாகப் பாடுபடுகிறார்கள். இப்படிப்பட்ட ஆசார்ய ஸேவையினாலாய அரும்பயன் நம் ஸ்ரீ வைஷ்ணவச் சிறுவர் சிறுமியர்க்கு எளிதில் கிடைக்கவில்லையே! 'ஆசாரியன் என்றால், பரமபதத்திற்கு உபகரிக்கின்ற சில உபதேசங்களைச் செய்பவன்' என்ற அபிப்ராய மாத்ரம் நடையாடுகிறதே! மக்களிடை, லௌகிக வைதிக மென்ற மாறுபாடு உணர்ச்சி போய், பொறுமையும் அன்பும் அருளும் வாய்ந்த ஆசாரியர்கள் வீடுதோறும் சென்று லோகஹிதைஷிணியான ஸ்ரீ பகவத்ராமாநுஜனுடைய ஸித்தாந்தைப் புகட்டவேண்டும். ஸ்த்ரீகள் வ்ருத்தர்கள் பாலர்கள் யாவருமே நம் உயர்ந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸார்வ லௌகிக ஸார்வகாலிக ஸித்தாந்தத்தை அறிந்து அன்புசெய்து, பட்டர்போலும், ராமாநுஜன்போலும், ஆண்டாள்போலும், ஸ்வாமி தேசிகன்போலும், ஸ்வ பர ஹிதமான பெருவாழ்வு வாழவேண்டும். பள்ளிக்குச் செல்லும் மாணவ மாணவிகள் விடுமுறை நாட்களில் நம் ஸித்தாந்தத்தை எளிதில் ஓதுமாறு எளிய புஸ்தகங்களும், அவற்றைக் கற்பிக்கும் பொறுமையும் அன்புமுடைய ஆசிரியரும், அத்தகைய கல்விக்கு இன்றியமையாத மனப்பான்மையும் நம்மிடம் எழவேண்டும். இடத்தைப்பற்றிக் கவலையில்லை. நம் முன்னோர்கள் அன்புடன் கட்டிவைத்திருக்கும் மடங்களும் ஆலயங்களுமே அமையும்.

ப்ரதி கிராமத்திலும் ரோகநிவாரண சாலைகள் இருப்பின் நலம். பாதிரிகளும் கன்யா ஸ்த்ரீகளும் நம் மக்களின் உள்ளத்தைப் பறிப்பது இவ்வழியாலேயே. எவ்வளவு ஸ்ரீ வைஷ்ணவ ப்ரபுக்கள் இல்லை! எவ்வளவு மேனாட்டுக் கல்வி பயின்ற ஊக்கமுள்ள இளைஞர் இல்லை! தெய்வத்தின்பேரால் சிகித்ஸாசாலைகள் ஏற்பட்டால், நோய் உற்றவர்க்குத் தக்க சிகித்ஸையும் அதன் வாயிலாக அச்சுதன்பால் அன்பும் உண்டுபண்ணலாமே! நாட்டைத் துறந்து மக்களைத் துறந்து நம்மிடைப் புகுந்து நம் உடல் நலத்திற்காகப் பாடுபடும் பாதிரிமார்களிடம் நம் மனம் உருகுவது, நம் ஸமூகத்தில் அத்தகைய மனப் பான்மை இல்லாததனால்தானே !

'பாலாலிலையில் துயின்ற பரமனை' வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்து, முக்காலமும் மகிழும் மூதறிஞர்களுடைய சரணாரவிந்தங்களை என் சிரஸ்ஸினால் சேர்த்து வேண்டிக்கொள்கிறேன். நம் லோக ஹிதைஷிணியான ஸ்ரீ வைஷ்ணவத்திற்குப் பேராபத்து வந்திருக்கிறது. அதை நூதனமான சாஸ்த்ர நிஷித்த மல்லாத முறைகளால் தடுத்துக் கொள்ளலாம் 'தர்மோ ரக்ஷதி ரக்ஷித:'. ஸர்வ சரண்யன் வந்து கை கொடுப்பான். நம் வாளா இருந்து விடலாமா? ஆதலின், தத்கால ஸம்பவங்களை நன்கு கவனிப்போமாக.

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் '47 ஆம் மார்ச் மாஸத்துச் சந்தா வரவு

			ரூ.	அ.
44	ஸ்ரீ S. ரங்கஸாமி ஐயங்கார், திண்டிவனம் (47)	...	3	0
169	,, C. M. வெங்கடராகவாசார்யர், ஹைதராபாத் (47)	....	3	0
205	,, K. வேங்கடாசார்யர், தளவாய்ப்பேட்டை, ஈரோட் (47)	....	3	0
260	,, T. S. ராமண்ணா, சங்கரபுரம், பெங்களூர் (46)	....	3	0
401	,, லக்ஷ்மி அம்மாள், தேவனூர் விளாகம் (46)	....	3	0
421	,, O. D. ஸௌந்தரராஜன், பண்ருட்டி (46)	....	3	0
483	,, V. ராமஸ்வாமி அய்யங்கார், புகலூர் (47)	....	3	0
513	,, T. M. க்ருஷ்ணமாசார்யர், புதுடெல்ஹி (47)	...	3	0
659	,, K. S. கோபாலன், ஜி. டி. சென்னை (47)	...	3	0
686	,, V. S. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், தி. நகர் (47)	....	3	0
703	,, V. B. நாராயணன், புதுடெல்ஹி (47)	....	3	0
710	,, S. ரங்காசார்யர், பெரம்பூர் (47)	....	3	0
711	,, S. A. ஸ்ரீநிவாஸன், மல்லாபுரம், பொம்மிடி (47)	....	3	0
768	,, K. A. ஸ்ரீநிவாஸையங்கார், கோனேரிராஜபுரம் (47)	....	3	0
767	,, T. ராஜகோபாலன், திருவேந்திபுரம் (47)	...	3	0
769	,, M. யதிராஜ நாயகர், மீஞ்சூர் (47)	...	3	0
770	,, K. பத்மநா[illegible], திருப்பாப்புலியூர் (47)	....	3	0
		ரூ.	51	0

தமிழ்நாடு ... நூலகம்
189232
சென்னை 600 0..

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
संजीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तुभ्यम् ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

மேல் நாட்டு நாகரிகம் நம்மிடம் இப்பொழுது தாண்டவ மாடுகிறது. ஆலய ப்ரவேஶம் என்னும் ஒரு கிளர்ச்சி தேஶமெங்கும் ஸஞ்சரிப்பதை எவர் அறியார்? ராஜாங்கத்தாரே நமது ஆசாரங்களையும் நமது தர்மங்களையும் தலை கீழாக மாற்ற முயன்று விட்டால் தர்மம் யாரை ஶரண மடையும்? இது ஸ்வராஜ்யம் கிடைத்ததின் பலமன்றோ? பாச்சாத்யர்கள் ராஜ்ய நிர்வாஹத்தை நடத்தி வந்த பர்யந்தம் நமது ஸநாதந தர்மம் எவ்வித கலக்கத்தையும் அடையாமல் கூடியவரையில் தெளிவாகவே இருந்து வந்தது. ராஜ்ய நிர்வாஹம் நமது ஜநங்களின் ஸ்வாதீநத்துக்கு வரவே, இந்த க்ஷோபம் ஆரம்பித்து விட்டது.

ராவ் கமிட்டியின் ரிபோர்ட்

"नास्ति नद्यानि शस्त्राणि न नः परमभयावहाः ।
पौरास्स्वयं प्रयुक्तास्तु स्वजना नो भयावहाः ॥"

நமது நிரூபகர்கள், தமக்குப் புதிதாகக் கிடைத்த ஸ்வாதந்த்ர்யத்தால் மயங்கி, வஸ்துக்களின் குண தோஷங்களைச் சரிவர உணராமல், தமது புத்திக்குத் தோன்றும் ப்ரகாரம் சீர்திருத்தங்களென்று அநேக அதர்மங்களைச் செய்ய ப்ரவர்த்தித்து விட்டார்கள். கேட்பார் ஒருவருமில்லை. கேட்டாலும் அதற்குச் செவி கொடுத்துப் பதில் கூறுவாருமில்லை. அநாதி காலமாக வழங்கிக்கொண்டு வந்த ஜாதி வ்யத்யாஸம் ஒழிய வேண்டுமாம். கொள்வினை கொடுப்புவினை யெல்லாம் எவ்வித நியமமுமின்றிக்கே தம்பதிகளின் மநஸ்ஸந்துஷ்டியையே ஆதாரமாகக் கொண்டு நடத்தப்பட வேண்டுமாம். ஆமரணம் அழிய மாறாமல் இருந்து வந்த தாம்பத்ய ரூபமான ஸம்பந்தம், இனித் தம்பதிகளால் தம்தம் இச்சை ப்ரகாரம் கோர்ட்டாருடைய அநுமதியின்பேரில் நிவர்த்தித்துக் கொள்ளப்படலாமாம். எவ்வித வரம்புமின்றிக்கே ஸர்வ விஷயங்களிலும் ஸர்வஸ்வாதந்த்ர்யம் ஏற்பட வேண்டுமாம். ஸத்வம் ரஜஸ் தமஸ்ஸுக்களாகிற குண த்ரயத்துக்குப் பரவஶமாயிருக்கும் நாம் சிற்சில கட்டுப்பாட்டுக்கு உட்பட்டே நடத்தல் வேண்டுமன்றோ? அப்படி ஒரு கட்டுப்பாட்டுக்கும் உட்படாமல் எந்தெந்தக் காலத்தில் எப்படியெப்படி தோன்றுகிறதோ, அப்படியெல்லாம் நாம் நமது வ்யவஹாரங்களை நடத்துவதானால், ஜநவாழ்க்கையே குலைந்துபோய் ம்ருகங்கள் போல் வர்த்திக்க நேர்ந்து விடுமே. நமது நிரூபகர்கள், அநேக தேஶங்களில் ஒருவித கட்டுப்பாடுமின்றிக்கே ஜந வாழ்க்கை

நடந்து வருவதை ஸுகவாழ்க்கைக்கு நிதர்ஸநமாகக் கூறுகிருர்கள். அவ்விடங்களில் குடும்ப வாழ்க்கையில் எவ்வித தீமைகள் ஸம்பவிக்கின்றன வென்பது அவர்களுக்குத் தெரியாதோ? ஜநங்களுக்குள் பரஸ்பரம் சண்டையும் சச்சரவும் எளியவர் வலியவர் கையில் சிக்குண்டு மஹத்தான கஷ்டங்களை அநுபவிப்பது மல்லவோ அவ்விடத்து நடவடிக்கைகளாக இருக்கின்றன? நமது தேஸமும் அந்தத் துர்தஸைக்கு ஆளாக வேண்டுமா?

ப்ரக்ருதத்தில் நமது நிரூபகர்கள் மற்றுமொரு புதிய சீர்திருத்தத்தைச் செய்ய ப்ரயத்நப்படுகிருர்கள். நமது ஸாஸ்த்ரங்கள், ஸ்த்ரீகள் விஷயத்தில் சொத்துக்கு உரிமையைச் சிற்சில நியமங்களுக்கு உட்பட்டதாக விதித்திருக்கின்றன. இம்மாதிரி நியமங்களை விதித்திருப்பதற்குக் காரணம், ஸ்த்ரீகளுக்குச் சொத்தை வைத்துக்கொண்டு ஆளும் விஷயத்தில் நைஸர்க்கிகமாயுள்ள சிற்சில சக்திக் குறைவே. அவர்களை ஒரு ரக்ஷ்ய வஸ்துவாகவும், அப்படி அவர்களை ரக்ஷித்து வருவதற்குப் புமான்களையே ஸக்தி வாய்ந்தவர்களாகவும் தைவம் ஸ்ருஷ்டித் திருக்கிறது. அதை ஸாஸ்த்ர கர்த்தாக்கள் க்ரஹித்து அம்மாதிரி சில நியமங்களை ஏற்படுத்தி யிருக்கிருர்களே யொழிய, ஸ்த்ரீகளுக்கு ஒருவித ஹிம்ஸையைச் செய்யவேண்டு மென்னும் கருத்தாலன்று. உலகத்தில் ஸகல வ்யாபாரங்களும் ஜநங்களுடைய வயஸ், வாக், வ்ருத்தி, வேஷம், இவை முதலிய ஸ்திதிகளுக்கு அநுரூபமாக ஏற்பட்டிருப்பனவாகக் காணப்பட வில்லையா? வயஸ்ஸினுல் அவிபக்வ புத்திகளாயிருக்கும் ஜநங்களுக்கு ஸர்வ ஸ்வாதந்த்ரயத்தை நாம் கொடுக்கிருேமா? அது அவர்கள் மீது உள்ள த்வேஷத்தா லென்று சொல்லக் கூடுமோ? அவர்களுடைய க்ஷேமத்தை உத்தேசித்தன்ருே நாம் அவ்விதம் செய்கிருேம்? அதுபோலவே, ஸ்த்ரீகள் விஷயத்திலும் நமதுபெரியோர்கள் சிற்சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி யிருக்கிருர்க ளென்று நாம் அறியவேண்டும். இப்பொழுது இவர்கள் அதைத் தலைகீழாக மாற்ற ப்ரயத்நப் படுகிருர்களே! இது என்னென்ன தீங்குகளை விளைவிக்குமோ? காலமே சொல்ல வேண்டும்.

இந்த நிரூபகர்கள் இப்பொழுது இந்த விஷயமாக என்ன திருத்தங்களைச் செய்ய ஆரம்பித்திருக்கிருர்க ளென்ருல் :—1. ஸ்த்ரீகளுக்குச் சொத்து பாத்யம் ஏற்பட வேண்டுமாம். 2. உயில் எழுதி வைக்காமல் காலமாகிவிட்ட மாதா பிதாக்களின் சொத்தில் புத்ரர்களுக்குப் பாகம் கொடுக்கப்படுவதுபோல் புத்ரிகளுக்கும் ஒரு பாகம் கொடுக்கப்படவேண்டுமாம். 3. இது பர்யந்தம் சொத்து விஷயமாக நியாமகமா யிருந்துவந்த 'மிதாக்ஷரம்' என்னும் க்ரந்தத்தில் சொல்லப்பட்டுள்ள முறைக்குப் பதிலாக, 'தாயபாகம்' என்னும் க்ரந்தத்திற் சொல்லப்பட்டுள்ள முறையே இனி அநுஸரிக்கப்பட வேண்டுமாம். இம்மாதிரி சட்டங்களை ஏற்படுத்துவதற்காக ராஜாங்கத்தார் 'ராவ் கமிட்டி' என்று ஒரு சிறிய பரிஷத்தை ஏற்படுத்தினுர்கள். அந்தப் பரிஷத்தால் இதன் ஸாதக பாதகங்கள் ஆலோசிக்கப்பட்டு, இன்னது செய்யவேண்டுமென்று அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது. அது சீக்ரத்தில் சட்டமாகி விடுமென்றும் தோன்றுகிறது. இந்த மாறுதல் என்ன உக்ரமான கஷ்டங்களுக்குக் காரணமாகுமோ வென்று இப்பொழுது சொல்ல முடியாது. ஒன்றை மாத்ரம் நாம் நிச்சயமாய்ச்

சொல்லலாம். இவ்வளவு காலமாகக் குடும்பங்களில் இருந்துவந்த ஸௌஜந்யம் பெரும்பாலும் ஹாநியை அடையுமென்றே நாம் பயப்படுகிறோம். ப்ராதாக்களுக்குத் தமது ஸகோதரிகளிட மிருந்த ஸஹஜமான ப்ரீதியானது இனி குறைவடைந்து விடமாட்டாதா? பெண்களுக்குப் பிறந்த க்ருஹத்தில் இப்பொழுது இருக்கும் அபிமாநம் குறையாம லிருக்குமோ? 'சொத்தில் ஒரு பாகத்தை எடுத்துக் கொண்டு போய்விட்ட ஸஹோதரிகளை நாம் ஏன் அடிக்கடி வீட்டுக் கழைக்க வேண்டும்? அவர்களுக்கு ஏன் நாம் சீர் செய்ய வேண்டும்?' என்னும் எண்ணம் ப்ராதாக்களுக்குத் தோன்ற மாட்டாதா? ஜகத் முழுவதும் ஒரே குடும்பமாக வாழவேண்டு மென்று பெரிய மநோரதத்தைக் கொண்டிருக்கும் நமக்கு, இந்த ஜகத்தின் அங்கங்க ளென்று சொல்லப்படக் கூடிய சிறிய குடும்பங்களுக்குள்ளாகவே தீவ்ரமான சைதில்யம் நேர்வதும், பிறருடைய நன்மையை நமது நன்மைபோல் பாவிக்கும் நோக்கம் மாறி ஸ்வார்த்தபரதை வளர்ந்து வருவதும் எவ்விதம் மநஸ் ஸமாதாநத்தைக் கொடுக்கும்? ஜகத்தை ஸ்ருஷ்டித்து அதைப் பரிபாலித்துவரும் கருணாநிதியான பகவானே இதற்கு ப்ரமாணமாகவேண்டும். கலிகோலாஹல க்ரீடையில் ரமிக்கும் அவன் இன்னும் என்னென்ன கூத்துக்களைச் செய்விக்கப்போகிறானோ யாருக்குத் தெரியும்?

* * * *

கொஞ்ச காலமாகச் சில பெரியோர்கள் ஸம்ஸ்க்ருத பாஷையின் அபிவ்ருத்தியைக் குறித்து விசேஷித்த ச்ரத்தை எடுத்துக்கொண் டிருக்கிறார்கள்.

ஸம்ஸ்க்ருத பாடசாலைகளின் சீர்திருத்தங்கள்

உத்தர தேசத்தில் 'ஆள்வார்' என்னும் ராஜதாநியின் அதிபதியாக இருக்கும் மஹாப்ரபு ஒருவர் பெரியதொரு ஸம்ஸ்க்ருத கலாசாலையை ஏற்படுத்துவ தாகவும், அதற்காக அளவற்ற த்ரவ்யத்தைக் கொடுத்திருப்பதாகவும் ஒரு செய்தி சென்ற வர்ஷத்தில் வெளி வந்தது. நமது ராஜதாநியிலும் சில பெரியோர்கள் சென்ற மாஸத்தில் ஒரு ஸங்கம் சேர்ந்து, 'ஹிந்து ஸர்வ கலாசாலை' என்று ஒரு பெரிய கலாசாலையை ஏற்படுத்துவதாகத் தீர்மானித்து, அதன் நிஷ்பத்திக்கு அபேக்ஷிதமான ஸம்விதாநங்களைச் செய்து வருகிறார்கள். இந்தக் கலாசாலையில் ஸம்ஸ்க்ருத பாஷா ப்ரசாரத்துக்கு ப்ராதாந்யம் கொடுக்கப்படு மென்றே நாம் நினைக்கிறோம். இவைகளைத் தவிர்த்து, சிற்சில ப்ரபுக்களுடைய பொருளுதவியைக் கொண்டு ஆங்காங்கு சில ஸம்ஸ்க்ருத பாடசாலைகள் பஹு காலமாக ஏற்படுத்தப்பட்டு, அவை நடைபெற்று வருகின்றன. திருமலை திருப்பதி தேவஸ்தாந பாடசாலை, மயிலாப்பூர் V. க்ருஷ்ணஸ்வாமி ஐயர் பாடசாலை, தஞ்சாவூர் மஹாராஜன் பாடசாலை, இம்மாதிரி சற்றேறக் குறைய இருபது முப்பது கலாசாலைகள் பல விடங்களில் நடந்து வருகின்றன. மலையாள தேசத்தில் பஹு காலமாக ஸம்ஸ்க்ருத ப்ரசாரம் நடந்து வருவது எல்லோர்க்கும் தெரிந்த விஷயம். ஸமீப காலத்தில், ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாநத்தில் இப்பொழுது எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கர், ஸம்ஸ்க்ருத பாஷையின் அபிவ்ருத்தியை உத்தேசித்தே ஸ்ரீ மதுராந்தகம் என்னும் நகரத்தில் பெரியதொரு பாடசாலையை நடத்தி வருவதும் எல்லாருக்கும் விதிதம். அதற்காகச் சற்றேறக் குறைய மூன்று லக்ஷ ரூபாய் மூலதந

மாக வைத்திருக்கிறுர். நமது யூனிவர்ஸிடியில் ஸம்ஸ்க்ருத ப்ரவர்த்தகராக இருக்கும் டாக்டர் குன்னின் ராஜா என்பவர், நமது ராஜதானியில் பெரியதொரு ஸம்ஸ்க்ருத யூனிவர்ஸிடி ஸ்தாபிக்கப்படவேண்டு மென்றும், ப்ரவசநம் முழுவதும் ஸம்ஸ்க்ருத பாஷையிலேயே நடத்தப்படவேண்டு மென்றும், ஆஸேது ஹிமாசல முள்ள இந்தத் தேசத்தில் ஸம்ஸ்க்ருத பாஷையையே ஸார்வ ஜநீந பாஷையாகச் செய்வதற்கு அபேக்ஷிதங்களான மஹா ப்ரயத்ந மொன்றை மஹா ஜநங்களெல்லாரும் செய்ய வேண்டு மென்றும், இம்மாதிரி ஒரு மனோரதத்தை வெளியிட்டிருக்கிறுர். இம்மாதிரி மஹத்தான பரிச்ரமத்தை அநேக ச்ரத்தாளுக்கள் இது விஷயமாக எடுத்து வருகையிலும், பாஷையின் ப்ரசாரம் ஓங்கி வளராமல், அது க்ருபணமான தசையிலேயே இருந்துவருவது சோசிக்கத் தகுந்த விஷய மல்லவா? ஒரு பாடசாலையிலாவது வித்யார்த்திகள் ஆங்க்ல பாடசாலைகளிற்போல பூர்ணமாக இருப்பதாகத் தெரியவில்லை. மஹா ஜநங்களுக்குள் இந்த வித்யையை அப்யஸிப்பதில் பெருத்த ஆவல் இல்லை போலும். இதன் காரணத்தை விசாரிக்கப்புக்கால், வ்ருத்தி கர்சிதர்களாக இருக்கும் ஏழை ஜனங்களுக்கு இந்த வித்யை த்ரவ்ய ஸம்பாதநம் போன்ற உதவி ஒன்றையும் செய்யவில்லை என்பதே காரணம் என்று சொல்லவேண்டும். இந்தப் பாடசாலைகளில் பத்துப் பன்னிரண்டு வர்ஷகாலம் ச்ரமப்பட்டுப் படித்துக் கடைசி பரீக்ஷையில் உத்தீர்ணர்களாக இருக்கும் அநேக வித்வான்கள் தாம் ஸம்பாதித்த வைதுஷ்யத்தால் ஜீவிகை ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள அசக்தர்களாகவே இருக்கிறுர்கள். தேஹ யாத்ரைக்கு உதவாத வித்யையை யார் தேடிப் போவார்கள்? க்ஷுத் நிவ்ருத்திக்கு உபகாரகமாக இருக்கும் உபாய மன்றே தீநர்களான ஜநங்களால் தேடப்படும்? என்ன ப்ரதீகாரத்தைக் கைப்பற்றினுல் இந்தத் துர்த்தசை நிவ்ருத்தமாகு மென்பதை விசாரிக்க வேண்டியது அவச்ய மாகின்றது.

இந்த விஷயமாக நமக்குத் தோன்றுவது ஒன்றுண்டு. அதாவது:—ஸம்ஸ்க்ருத பாஷா ப்ரவசநத்துடன் த்ரவ்ய ஸம்பாதநத்துக்கு இன்றியமையாததொரு வித்யாந்தரத்தையோ, அல்லது அவரவர்களின் ஜாதிக்கு அநுகுணமான ஒரு தொழிலையோ, சேர்த்துக் கற்பிக்கவேண்டு மென்பதே. உதாஹரணமாக இரண்டொன்றைக் காண்பிக்கலாம். குடும்ப ஸம்பந்தமாகவோ, பெரிய வ்யாபாரிகளின் கடை ஸம்பந்தமாகவோ, வரவு செலவு கணக்குகளை வைத்துக் கொள்ளும் வித்யை எல்லார்க்கும் அநுகுணமான வித்யையே. இதைக் கற்றுக் கொண்டால், இதைக் கொண்டு ஒரு வ்ருத்தியை ஏற்படுத்திக் கொள்ளலாம். ஜகத்தில் நடக்கும் ஸமாசாரங்களைச் சரிவரத் தெரிந்து கொள்வதும் ஒரு நல்ல ஸாதநம். அந்தந்தக் காலங்களில் எவ்விதம் கார்யங்களை நடத்தினுல் அவை மஹா ஜநங்களுக்கு அநுகூலமாக இருக்கு மென்பதைத் தமது புத்திக் கெட்டின வரையில் ஸாவதாநமாக ஆலோசித்துப் பார்த்து, அவைகளை அப்பொழுதைக்கப்பொழுது பத்ரிகா மூலமாகத் தெளிவாகவும் ஆர்ஜவத்துடனும் ப்ரசுரித்து, மஹா ஜநங்களுக்குக் கார்யாகார்யங்களை எடுத்துரைப்பதும் பெரிய தொரு கார்யமன்றே? இதற்குப் பல தேசங்களுடைய சரித்ரங்களின் ஜ்ஞாநமும், விஷயங்களை எடுத்து நன்கு உபபாதிக்கும் ஸாமர்த்யமும் அபேக்ஷிதங்கள்.

தொழில்களிலும் வ்ருத்தி ஹேதுக்களான தொழில்கள் பல உண்டு. அச்சுக் கோக்கும் தொழில் நிராபாதமான தொழில். த்ரவ்ய ஸம்பத் அமைந்துள்ள பாடசாலாதிகாரிகள் அச்சுயந்திரங்கள் ஸம்பத்தங்களான ஸாமக்ரிகளைச் சேர்த்து, அந்தத் தொழில் தெரிந்த ஒரு தொழிலாளியையும் நியமிக்கும் பக்ஷத்தில்' இந்தத் தொழிலை எளிதில் அநேகம் வித்யார்த்திகள் கற்றுக்கொள்ளக்கூடும். காகிதம் செய்யும் தொழிலுக்கும் கிராக்கி இருக்கிறது. இவை யெல்லாம் நமது ப்ரதாநமான ஸம்ஸ்க்ருத ஶாஸ்த்ராப்யாஸத்துக்கு அவிருத்தங்களே. ஒவ்வொரு திநத்திலும் பூர்வாஹ்நம் முழுவதையும் நமது ஶாஸ்த்ராப்யாஸங்களில் செலுத்தி, அபராஹ்நத்தில் கீழ்க் கூறப்பட்டுள்ள வித்யைகளை யதோசிதம் அப்யஸித்து வரக்கூடாதா? இவை ஒன்றுமின்றிக்கே கேவலம் ஸம்ஸ்க்ருத பாஷா ப்ரவசநத்தை மாத்ரம் செய்வித்தால், அது ஒரு பிழைப்புக்கும் ஸாதநமாக மாட்டாதாகையால், அதைத் தேடிவரும் வித்யார்த்திகள் மிகவும் அல்ப ஸங்க்யாகர்களாக இருப்பார்களே யொழிய பஹு பெயர்கள் இதைத் தேடி வருவார்களென்று சொல்ல முடியாது.

இம்மாதிரி உபாயங்களைக் கைப்பற்றுவதுடன் இன்னும் ஓர் உபாயத்தையும் நாம் கைப்பற்றலாம். அடியேனுடைய அநுபவத்தில், அநேக புத்திசாலிகளான வித்யார்த்திகள்கூட ஆபலோதயம் வித்யாப்யாஸத்தைச் செய்யாமல் நடுவில் அதை விட்டுவிட்டு உபயதோ ப்ரஷ்டர்களாகத் திரும்பிப் போவதை அடியேன் பார்த்திருக்கிறேன். இதைத் தடுப்பது அத்யவச்யம். வித்யை பூர்த்தி யடையும் பர்யந்தம் விடாமுயற்சியுடன் படித்து உத்தீர்ணராகுமவர்களுக்கு ஒரு குணவத்தான ப்ரோத்ஸாஹநத்தை ஏற்படுத்துவதே, இந்த அநிஷ்டத்தைத் தடுப்பதற்குத் தகுந்த ப்ரதீகாரம். பத்து வர்ஷ காலம் ஸாவதாநமாகவும் ச்ரத்தையுடனும் படித்து, கடைசியாகப் பரீக்ஷையில் உத்தம நிஷ்பத்தி பெறுமவர்களுக்கு வ்ருத்தியின் அவலம்பத்திற்கு மூலதநமாக ஒரு ஸ்தோம த்ரவ்ய ஸமூஹம் கடைசியில் கொடுக்கப்படு மென்று ஒரு ஏற்பாட்டைச் செய்தால், அதன் மீது ருசியால் வித்யார்த்திகள் நிலை பெற்று நிற்பார்கள். அதற்கு ஏராளமான த்ரவ்யம் வேண்டுமே யென்று பயப்படாமல் அதை ஸுலபமாக ஸாதித்துக் கொள்வதற்கு உபாய முண்டு. பாடஶாலைகளில் ஒவ்வொரு வர்ஷத்திலும் சற்றேறக்குறைய இருபதினாயிரம் ரூபாய் செலவு ஆகிறதாக வைத்துக்கொள்வோம். வித்யார்த்திகளின் ஸங்க்யையை முக்கால் பங்குக்குக் குறைத்து, அதுவழியாகச் செலவைப் பதினையாயிரத்துக்கு அடக்கிக் கொண்டால் வர்ஷம் ஒன்றுக்கு ஐயாயிர ரூபாய் மிகுதிப்படும். இதை இரண்டு அல்லது மூன்று உத்தீர்ணரான வித்யார்த்திகளுக்குக் கொடுத்து உதவினால், அது குடும்பத்தை ஆரம்பிக்கும் வித்யார்த்திகளுக்கு அநர்க்கமான உபகார மாகுமன்றோ? பத்து வர்ஷகாலம் படித்துக் கடைசியில் நிஷ்பத்தியை அடைபவர்கள், வர்ஷத்தில் இரண்டு மூன்று பெயர்களுக்கு மேற்படமாட்டார்கள். சற்றேறக் குறைய இரண்டாயிர ரூபாய் வித்யாப்யாஸத்தின் முடிவில் பாரிதோஷிகம் கிடைக்கு மென்னும் ப்ரத்யாஶை இருந்தால், ஒருவனும் நடுவில் வித்யாப்யாஸத்தை விட்டுவிட்டுப் போகமாட்டா னன்றோ? இது பாடசாலைக்கு அதிக செலவாக மாட்டாது. இந்த விஷயங்களைப்

பாடஶாலைகளின் அதிகாரிகள் நன்கு பராமர்சித்து, இவை குணவத்தான ஆலோசனைகள் என்று தோன்றினல், இவைகளை உபாதேயங்களாக அங்கீகரிப்பது மின்றிக்கே, அநுஷ்டாநத்திலும் நடத்திக் காட்ட வேண்டு மென்று ப்ரார்த்திக்கிறோம்.

*　　　*　　　*　　　*

உத்தர தேசத்தில் நடக்கும் அட்டூழியங்கள்

இரண்டொரு வர்ஷ காலமாக நமது தேசத்தில் கணக்கற்ற ஜந நாசம் ஸம்பவித்து வருகின்றது. சென்ற வர்ஷத்தில் வங்காளத்தில் உணவுப் பொருள் அகப்படாமலிருந்த காரணத்தால் பஹு ஜநங்கள் மடிந்தார்கள். இந்த வர்ஷத்தில் ஜாதி ஸம்பந்தமான சச்சரவு ஒரு ப்ரளயத்துக்குக் காரணமாக இருக்கிறது. வங்காளத்திலும் பஞ்சாபிலும் முஸ்லிம் ஜாதியர்களும் ஹிந்து மதஸ்தர்களும் ஒருவரை யொருவர் கத்தியால் குத்திக் கொண்டும் கழுத்தைக் வெட்டிக் கொண்டும் ஆயிரக்கணக்கில் நாஶ மடைவதாக அறிகிறோம். வேறு பல துஷ்டர்களும் ஒன்று சேர்ந்து ஜநங்களை ஹிம்ஸிப்பதிலேயே மஹத்தான உத்ஸாஹத்துடன், சத்ரு மித்ரர்க ளென்றுவது பால வ்ருத்தர்க ளென்றுவது ஸ்த்ரீ புமான்கள் என்றுவது ஒருவித ஸ்திதியையும் பாராமல், வெறி பிடித்த காட்டு ம்ருகங்கள் போல க்ராமங்களிலும் நகரங்களிலும் கூட்டங் கூட்டமாக ஸஞ்சரித்துக்கொண்டு கையில் அகப்பட்டவர்களைக் கொன்றுவருகிறார்களாம். அந்த அட்டூழியங்களை அடக்குவதற்கு ராஜாங்கத்தார் பஹு ப்ரகாரமாக ப்ரயத்நப்பட்டும், அந்த அட்டூழியங்கள் ஓய்ந்தபாடில்லை. நாலு பங்கங்களிலும் ரக்த ப்ரவாஹம் ஓடுகிற தென்றும், தெருக்களில் துண்டுபட்ட தேஹங்கள் துடிக்கக் காணப்படுகின்றன வென்றும் சொல்வதில் ஸவல்பமேனும் அத்யுக்தி யில்லை யென்றே சொல்லலாம். இந்தப் படு கொலை எப்பொழுது எப்படி எவர்களுடைய முயற்சியால் நிற்குமோ வென்பது ஒருவர்க்கும் தெரியவில்லை. ஒரு கால் இதை ஸ்ரீ ஶரண்யனுடைய க்ருபா கார்ய மென்று ஶாஸ்த்ரஜ்ஞர்கள் சொல்லாம். அப்படிச் சொல்வதால் நமக்கு என்ன ஆறுதல் ஏற்படும்?

பகவானுடைய வ்யாபாரங்ளுள் ஸம்ஹாரம் என்று ஒரு வ்யாபாரம் உண்டு. அதை சாஸ்த்ரங்கள் கருணை கார்யமென்று சொல்லுகின்றன. 'பகவான் கருணாநிதி யாயிற்றே; அவன் அந்தக் கருணை காரணமாக ஜகத்தை ஸ்ருஷ்டிக்கலாம்; அதை ஸம்ரக்ஷிக்கவும் ஸம்ரக்ஷிக்கலாம். அப்படித் தன்னலேயே ஸ்ருஷ்டிக்கவும் வளர்க்கவும் பெற்றுள்ள ஜகத்தை அவனே ஸம்ஹரிக்கிறு னென்று சொல்வது அவனுடைய கருணை வ்யாபாரத்துக்கு எப்படி ஒவ்வும்?' என்று ஒரு கேள்வி உண்டு.

"விஷவ்ருக்ஷோऽபி ஸம்வர்த்ய ஸ்வயம் சேத்துமஸாம்ப்ரதம் ॥"

[ஒரு வ்ருக்ஷம் விஷ வ்ருக்ஷமா யிருந்தபோதிலும், அதை வளர்த்து வந்தவன் தானே அதை வெட்டத் துணிவானு?] என்றன்றோ நமது நடவடிக்கைகளுக்கு வழி காண்பிக்கும் சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன? அந்த சாஸ்த்ரங்களுக்கெல்லாம் கர்த்தாவாக இருக்குமவன் தான் உபதேஶித்திருக்கும் தர்மத்திற்கு

விருத்தமான நடத்தையில் ப்ரவர்த்திப்பானு?' இதற்கு சாஸ்த்ரங்கள் என்ன யுக்தியைச் சொல்லுகின்றன வென்பதைச் சற்றுக் கவனிப்போம்.

த்வம்ஸ ரூபமான ப்ரளயமானது, தேஹேந்த்ரியாதிகளின் நாஶ ரூபமானதால் அது துக்காத்மகமே. ஆனுல் ஈச்வரன் தன்னை ஆச்ரயிக்கைக்காகச் சேதந ரெல்லாருக்கும் கரண களேபரங்களைக் கொடுக்கிருன். அவைகளைக் கொண்டு நாம் அவனை ஆச்ரயித்து உஜ்ஜீவிக்கவேண்டு மென்பது அவனுடைய கருத்து. நாமோ அந்தக் கருத்தை அறியாமல், ஆறு கடக்கைக்குப் பற்றின ஓடத்தை நீர் வழியே ஓட்டுவான் போலும், மரத்தை அறுக்கக் கொடுக்கும் கத்தியைக் கொண்டு பசுவின் வாலைத் தறிப்பார் போலவும், இந்தக் கரணகளே பரங்களை நமக்கு அநர்த்தத்தை உண்டு பண்ணும் ஶப்தாதி விஷயங்களில் ஶாஸ்த்ர விருத்தமாக உபயோகப்படுத்தி அதடியாகக் கணக்கற்ற பாபங்களைச் செய்கிறேம்.* அதற்குத் தடையாகப் பகவான் ப்ரளயத்தை உண்டு பண்ணுகிருனும். நமக்கு ஶரீரேந்த்ரிய ஸம்பந்தத்தை நீக்கி, அம்முகத்தாலே வ்யாபார விசேஷரூபமான வ்யாபாரத்தை மேற்கொண்டு பாப கார்யத்தைச் செய்ய வொட்டாமல் தடுக்கிரு னன்றே? இது வ்ரண சிகித்ஸா ந்யாயத்தால் நமக்கு உபகார ரூபமாக முடிகின்ற தென்பதுதான் ஶாஸ்த்ரம் சொல்லும் பரிஹாரம். இந்த அர்த்தத்தை ஸ்ரீ தேசிகன் ஸ்ரீ தயாஶதகத்தில் பின் வருமாறு விளக்குகிருர்.

" 𑌆𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌸𑌂𑌤𑌤𑌾𑌨𑌾𑌮𑌪𑌰𑌾𑌧𑌾𑌨𑌾𑌂 𑌨𑌿𑌰𑍋𑌧𑌿𑌨𑍀𑌂 𑌜𑌗𑌤𑌃 ।
𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌹𑌾𑌯𑌕𑌰𑍁𑌣𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌸𑌂𑌚𑌰𑌕𑍇𑌳𑌿𑌮𑌾𑌚𑌰𑌸𑌿 ॥ ",

[ஸ்ரீநிவாஸனுடைய கருணையே! ஸ்ருஷ்டிகாலம் தொடங்கி இந்த லோகத்திலுள்ள சேதநர்களால் ஒழிவில்லாமல் பண்ணப்படாநிற்கிற பாபங்களுக்குத் தடையாய் நீ இந்த ப்ரளய மாகிற லீலையை நடத்துகிருய்]. ஆனுல் ஶாஸ்த்ரத்துக்குப் பயந்து நாம் இந்த ஸமாதாநத்தை ஒத்துக்கொள்கிறேமே யொழிய, நம்முடைய ஜநநாஶத்தால் உண்டாகும் ஹ்ருத்கதமான ஶோகமோ எவ்வித ஸமாதாநத்தையும் அடையாமலே நிற்கின்றது. ஸமாதாநம் ஒருபக்கத்தில் இருக்கையிலும், கொழுந்துவிட் டெரியும் ஶோகம் நமது ஹ்ருதயத்தைத் தஹிக்கின்றது. இப்பொழுது வங்காளத்திலும் பஞ்சாபிலும் அதி துஸ்ஸஹமான ப்ரளயம் அடையும் ஜநங்களை நோக்கி, 'இனித் தேஹேந்த்ரியம் இராமலிருக்கும் உங்களுக்குப் பாபாசரணம் தடைபட்டுநிற்கும்' என்னும் ஸமாதாநம் என்ன ஶாந்தியைக் கொடுக்கு மென்பது நமக்கு விளங்கவில்லை. அகதிகளான நமக்கு, ஸர்வ ஸ்வதந்த்ரனை ஈச்வரனுடைய பாக்யமே ப்ரமாணம்.

---

* [இது விஷயமாகப் பெரியாழ்வார் அருளிச்செய்த ரஸோக்தி ஒன்று நமது நினைவிற்கு வருகிறது. "............... திருக்கோட்டியூர் திருமாலவன் திருநாமங்கள், எண்ணக்கண்ட விரல்களா லிறைப்பொழு தெண்ணகிலாது போய், உண்ணக்கண்ட தம்மூத்தை வாய்க்குக் கவளமுந் துகின்ருர்களே" என்பது அப்பாசுரம். கரண களேபரங்களைத் துர்விநியோகம் செய்யுமவர் விஷயத்தில் ஆழ்வாரது அநவதிகமான இரக்கமுள்ளத்தன்மை தென்பதை உய்த்துணரத்தக்கது.]

189232

Regd. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற

கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

	சந்தாதாரர்களுக்கு ரூ. அ	மற்றவர்கட்கு ரூ. அ.
1. ஸ்ரீ அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8	7—8
2. உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0–12	1—0
3. உக்தி நிஷ்டாபரணோத்யோதம் ,,	0—8	0–12
4. வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் (க்ரந்த லிபி) ...	1—0	1—8
5. ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—8	0–12
6. ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3	0—4
7. ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0	3—0
8. ஈசாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழி பெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0	1—8

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள்:—

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 5, ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், சென்னை.

என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Edited and Published by S. Vasudevachariar, 5, Ramaswami Street, Tyagarayanagar, Madras.